12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 3—12—1978 | இதழ் 12

புனித ராஜ்யம்



காட்சி 15

பாலம்மாள்வீடு – சுந்தரி.

ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, மேஜையில்தலையைக் கவிழ்த்தவாறு தலைவிரி கோலமாக விம்மி விம்மி அழுது கொண்டிருக்கிருள். பாலம்மாள் அவளருகே நின்று சமாதானம் செய்கிருள். இத்தச் சூழலில் காட்சி தொடங்குகிறது)

பாலம்மாள்: சொக்கிகுட்டி! சுந்தரி கண்ணு!... அழாதேம்மா'... ஏதோ எனக்கும் தெரியாம விபரீதம் நடந்து போச்சு. நீ பாத்ரும்ல குளிச்சுகிட்டுஇருக்கியே; கடையில போயி வெத்திலை பாக்கு வாங்கிகிட்டு வருவோம்—அந்த நேரத்திலே எவனும் காவாலிப் பசங்க, திருட்டுப் பசங்க — உள்ளே நுழைஞ்சுடப் போருனுங்கன்னு; கதவைப் பூட்டிக்கிட்டுப்போனேன். அவனுங்க எப்படியோ என் கண்ணிலியும் மிளகாய்ப் பொடியைத் தூவிட்டு முன்னுடியே வந்து அறைக்குள்ளே ஒளிஞ்சிகிட்டு இருந்திருக்கானுவ! .... நல்ல காலம் நீ கெட்டிக்காரத்தனமா அவனுங்களை விரட்டினதுக்கும்- நானும் வீட்டைத் திறந்துகிட்டு உள்ளே வந்ததுக்கும் சரியா இருந்தது! இல்லேன்ன என் தங்கத்தோட கதி என்னுகிறது?

சுந்தரி: (சீறியெழுந்து) அத்தே! போதும் உங்கள் போலி நடிப்பு; உங்களை ரொம்ப கௌரமான பொம்பளையா நினைச்சு எங்க தாத்தா என்னை இங்க வரச் சொன்னரு பாருங்க! கிராமத்திலே இருந்தா வெறிநாய்கள் கடிக்க வரும்—அதனுலே பட்டணத்துக்கு வருவோம்னு வந்தா; இங்கே ஓநாயே வாயைப்பிளந்துகிட்டு நிக்குது. நெத்தியிலே ஒரு அங்குல கனம் விபூதி! நேம நிஷ்டை பூஜை புராணம் — வீடு பூரா கடவுள் படம்— பார்வதி, லட்சுமி, சரசுவதி— பத்தாததுக்கு கருமாரியம்மன் காளியம்மன் இவ்வளவு படத்தையும் வச்சுகிட்டு, இந்த வீட்டையே உடல்வியாபாரக் கடையா, மாத்திகிட்டு வாழுறீங்களே; உங்களுக்கு இந்தப் படத்தையெல்லாம் கும்பிட, பக்தி சிரத்தையோடு பூஜை செய்ய என்ன யோக்யதை இருக்குது?

பாலம்மா: என்னை நம்ப மாட்டியா சுந்தரி?

சுந்தரி: நீங்க நடத்தின நாடகம் முழுக்க எனக்குத் தெரியுமே! கரன்சி நோட்டுக்களை எண்ணிக் கொடுத்து இரவு விருந்துக்குவந்த அந்த கயவர்களிடம் – அத்தே! நீங்கள் எப்படியெல்லாம் பேசினீங்க? என்னை வளைக்கிறதுக்கு என்ன வழியெல்லாம் சொல்லிக் கொடுத்தீங்கன்னு — எனக்குத் தெரியும். பாத்ரூமுக்குள்ளேயிருந்து இந்தப் பாவி அதையெல்லாம் கேட்டுகிட்டுத்தான்இருந்தேன், அதனுல என் கிட்ட இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்பது போல பாசாங்கு செய்யாதீங்க! உங்களுக்கு என்னத்தே குறைச்சல்? நாலு வீடு பாத்திரம் கழுவி வேலை செஞ்சி பசியாறக் கூடாதா? இல்லை, வேலையொன்றும் கிடைக்கலேன்னு பட்டினி கிடந்து சாவுறது! அதை விட்டுட்டு பரத்தைகளைவைத்துச் சம்பாதிக்கும்இந்தத் தொழிலுக்கு எப்படி யத்தை உங்கள் மனம் துணிந்தது? ஏதோ நான் தப்பிவிட்டேன்! என்னைப் போல எத்தனை இளம் பெண்களுடைய வாழ்க்கையை இந்த வீட்டுக்குள்ளே வட்டமிட்டுவரும் வல்லூறுகளுக்குப் பலி கொடுத்திருக்கிறீர்களோ; யார் கண்டது?

பாலம்மா: சரிதாண்டியம்மா? வந்தவ எவளும் உன்னைப் போல வம்பு பண்ணலே; அவளவளும் சம்மதத்தோடதான் வந்தாளுங்க! இப்பவும் வர்ராளுங்க!

சுந்தரி; (ஆத்திரச் சிரிப்பு) உங்களையறியாமல் உண்மையை ஒத்து கிட்டதுக்கு ரொம்ப நன்றி! அத்தே! கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க! இது கண்ணகி பிறந்த நாடுன்னு கம்பீரமாகச் சொல்லுகிறேம்! இந்த நாட்டிலே கற்பு கடைச் சரக்கா ஆகிறதா அத்தே? ஆகலாமா அத்தே?

பாலம்மா: என்னுடி பெரிய கற்பு? ஏழை பாழையா இருந்து தப்பு செஞ்சா தாண்டி அவளுக்கு பேரு விபச்சாரி! பணங்காசு கையிலே இருந்து மாடி வீடு-பங்களா கார்-கழுத்திலே நெக்லஸ் — கையிலே வைர வளையல் — இப்படி தளுக்கு மினுக்கி வாழுறாளுங்களே; அவளுங்க காலையில் ஒருத்தன் மாலையில ஒருத்தன்னு மாத்திகிட்டு திரிஞ்சாலும் — அவளுக்குப் பேரு விபச்சாரி இல்லே? சொசைட்டி கேர்ள்! அப்படி எத்தனை "சொசைட்டி கேர்ள்"கள் வாழுறுங்க தெரியுமா?

சுந்தரி: அத்தே! நீங்க செய்ற தப்புக்கு விளக்கம் வேற கொடுக்கிறீங்களா?

பாலம்மா: விளக்கமில்லைடி!... இதோ இருக்கு பாரு வியாச பாரதம் — இதிலே அஞ்சு பேருக்கும் தேவி அழியாத பத்தினி–துரௌபதி! அவளை யாரு குற்றம் சொல்லிட்டாங்க? திரௌபதியம்மன் கோயில் கட்டி வச்சி வருஷா வருஷம் தீமிதித் திருவிழா நடத்துருங்க!

சுந்தரி: தவறு செய்யறவங்களுக்கு தவருன உதாரணங்கள் தான் கண்ணிலே படும்! பரத்தைத் தொழில் பாபம் என்று சொன்னல்; உடனே பாரடி பாரதத்தை என்கிறீர்களே; சிறிது சிலப்பதிகாரத்தின் பக்கம் உங்கள் சிந்தையைத் திருப்புங்களேன் அத்தை! கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி, கண்ணகிக்கு நிகரான கற்பரசியாகத் திகழ்ந்தாள் என்பதுதானே அந்த இலக்கியத்திற்கே பெருமை!

பாலம்மா: அப்படி வாடியம்மா வழிக்கு' சிலப்பதிகார காலத்திலேயே கணிகையர் குலம் என்று ஒன்று இருந்திருக்குல்லே

சந்தரி: குலமிருந்தது! கோயில்களில் தூய்மை கலையாமல் ஆண்டவனைத் தொழுவதற்கு அந்த மக

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

கலைஞர் கருணாநிதி

பெங்களூரில் நடைபெற்ற பாராளுமன்ற ஜனநாயக கருத்தரங்கு

கழகப் பொருளாளர் சாதிக்பாட்சாவின் கருத்துரைகள் பெற்ற பாராட்டு

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால், தீரன் திப்பு மைசூர் மாநிலத்தை ஆண்டபோது தன்னாட்டு உணர்வும் அயல் நாட்டார் ஆதிக்கவெறியை அடக்குவதில் காட்டிய ஆர்வமும் அம்மாநிலத்தில் எப்படி இருந்தது என்பதை வரலாறு தெரிவிக்கிறது. அதே மைசூர் மாநிலத்தின் இன்றைய தலைநகரான பெங்களூர் நகரில் கடந்த நவம்பர் திங்கள் 13 முதல் 17-ஆம் நாள் வரையில் சனநாடக உணர்வுகளுக்குவலுவூட்டும் பல்வேறு கருத்தரங்குகள் நடைபெற்றன. இந்திய சனநாயகப்பாரம்பரியத்திற்கு மெருகூட்டியிருக்கின்றன.

அழகுகொழிக்கும்பெங்களூர் நகரில் எழுச்சிபெற்றுவரும் தென்மாநிலங்களின் நாடாளுமன்றக் கருத்தரங்கு ஒன்று காமன்வெல்த் பார்லிமெண்டரி அசோசியேஷன் என்ற அமைப்பின் கருநாடகமாநிலக் கிளையின் சார்பாக நவம்பர் 13 முதல் 17 வரைநடைபெற்றது.

தமிழகம், ஆந்திரம், கேரளம், கருநாடகம் ஆகிய தென் மாநிலங்களும்,கோவா,மராட்டியம் ஆகிய மாநிலங்களும் கருத்தரங்கில் கலந்து கொண்டன. தென்மாநிலங்களில் ஒன்றான புதுவையின் பிரதிநிதியும் கலந்துகொள்வதாக அறிவிக்கப்பட்டது. ஆனால்; கருத்தரங்கு துவங்குவதற்கு முதல் நாள் அந்த மாநிலத்தின் அமைச்சரவை கலைக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்களும் பதவி இழந்த காரணத்தால் புதுவைக்கு அந்தக் கருத்தரங்கில் பிரதிநிதித்துவம் இல்லாமற்போயிற்று.

பார்லிமெண்டரி சனநாயகத்தில் மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சி அல்லாத மாநிலம்எந்த அளவுக்கு சனநாயக உரிமைகளை இழக்கிறது என்பதற்கு இதுவே தக்க சான்றாக பெங்களூர் கருத்தரங்க நேரத்தில் அனைவராலும் உணரப்பட்டது.

கருத்தரங்கில்ஏறக்குறைய ஏண்பது பிரதிநிதிகளுக்கு மேல் கலந்து கொண்டனர். தமிழகத்தின் சார்பில் சட்டப் பேரவைத் தலைவர் திரு. முனுஆதி, ஆளுங்கட்சி உறுப்பினர்களான தோழர்கள் டாக்டர் சமரசம், பண்ணை சேதுராமன், திருப்பூர் மணிமாறன், ஆளுங்கட்சியின் மேலவை உறுப்பினர்கள் ஓ. வி. வெங்கடேசன். திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் தமிழக மேலவை இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. திண்டிவனம் இராமமூர்த்தியும் கலந்து கொண்டனர்.

தமிழக எதிர்க்கட்சிகளின் சார்பில் கழகப் பொருளாளரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் கலந்து கொண்டார். தமிழகச் சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும்.

பெங்களூர் நகரத்தின் எழில்கூட்டி கட்டிடக்கலையின் சிறப்புச் சின்னமாகவிளங்கும் 'விதான் செளதா' எனும் கருநாடக மாநில சட்டமன்றக் கட்டிடத்தில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கை புதுடில்லி மாநிலங்களவைத் துணைத்தலைவர் திரு. இராம்நிவாஸ் மத்தா தலைமைவகிக்க நாடாளுமன்ற அவைத்தலைவர் திரு. கே. எஸ். ஹெக்டே தொடக்கிவைத்தார். கருநாடக மாநில சட்டமன்ற அவைத்தலைவர் வெங்கடரமணா அனைவரையும் வரவேற்றார்.

கருத்தரங்கின்நடவடிக்கைகள் அனைத்தும் அனைவருக்கும் பொதுவான ஆங்கில மொழியிலேயே நடைபெற்றதால். மொழிப் பிரச்சினைக்கே அங்கு இடமில்லாமற்போயிற்று.

தோழன்

முதல்நாள் பிற்பகலில் கிராமப்புற மக்களின் பிரச்சினைகளும்சனநாயகமும்என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

கிராமப்புற மக்களிடையில்தான் இன்று சனநாயகம் பணத்திற்கு ஏலம் போவதை அன்று பேசியவர்கள் நாசுக்காகக் சுட்டிக்காட்டியதுகேட்போர்க்குக் சுவையாக அமைந்தது.

அடுத்த நாள் காலை (14—11—78)இந்தியநாடாளு சனநாயகமும் அதன் இயக்கமும் என்ற தலைப்பில் கருத்தரங்கு துவங்கிநடைபெற்றது.

இரண்டாம் நாள் கருத்தரங்கிற்கு சுரீப்ம்கோர்ட் மூத்த வழக்கறிஞர் டாக்டர் எம். எம். சிக்கி தலைமை வகித்தார். மத்திய இரயில்வே அமைச்சர் மதுதண்டவாடே முக்கிய உரை நிகழ்த்தினர்.

ஓடும் இரயிலில் கொள்ளையடிக்கப்பட்ட அவலத்தை காவல்துறையிடம் புகாரைக் கொடுக்கப்போனவர்கள் ஆங்கில மொழியில் எழுதிக் கொடுத்தார்கள் என்ற காரணத்துக்காகவே, புகாரை ஏற்கமறுத்த இரயில்வேத் துறையின் அமைச்சர் மது தண்டவாடே அன்றையகருத்தரங்கில் நாடாளுமன்றமேம்பாட்டைக் குறித்து ஆங்கிலத்திலேயே உரை நிகழ்த்தியதைக் கூடியிருந்தோர் வியப்போடு கேட்டார்கள்.

இரண்டாம் நாள் கருத்தரங்கில் பேசிய அனைவரைக் காட்டிலும் — கழகத்தின் கொள்கை முழக்கமே தெளிவாகக் கேட்டது. அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்கள் அனைவரின் கருத்தையும் ஈர்க்கும் அளவுக்கு எதிரொலித்தன.

இரண்டாம் நாள் கருத்தரங்கில் பேசிய அனைவரிலும் கழகச் சார்பாக அதன் சனநாயகக் கொள்கை—கோட்பாடுகளை முழங்கிய பொருளாளர் திரு. சாதிக்பாட்சா அவர்கள்தான் மிக அருமையாகப் பேசியவராகக் கருதப்பட்டார். சாதிக் அவர்களின் ஆங்கிலப் பேச்சும் அவர் எடுத்துவைத்த வாதங்களும் வந்திருந்த அனைவரையும் நெகிழவைத்தன.

இரண்டாம் நாள் கருத்தரங்கில் சாதிக்பாட்சா அவர்கள் தாம் முதன்மையாளராகத் திகழ்ந்தார் என்பது கூடியிருந்த கற்றறிவாளர்களின் கருத்தாக அமைந்தது. அன்றைய கருத்தரங்கு விவாதத்தின் உயிர்நாடியாகக் கழகத்தின் கொள்கைகளும் கலைஞர் அவர்களின் திட்டங்களுமே விளங்கின.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இயக்கம், நெருக்கடி காலத்தில் எவ்வாறு அலங்கோலமாகத்திசைதிருப்பப்பட்டது என்பதை அவர் புள்ளி விவரங்களோடு அடுக்கிக் காட்டியதை. அத்தனை பேரும் வாய் பிளந்து மெய் மறந்து கேட்டனர்.

ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய நாடாளு மன்றப் பாரம்பரியம், நெருக்கடி காலத்தில், சர்வாதிகாரத்தின் ஊற்றுக்காலாக விளங்கி இந்தியாவின் மூலை முடுக்குகளிலும் நச்சு நீரைப் பாய்ச்சி மக்களைக் கொடுமைக்குள்ளாக்கியதை அவர் வருணித்தபோது, வடமாநிலங்களில் இருந்து வந்திருந்த அனைவரும் "பஹுத் அச்சா' போட்டு வரவேற்றனர்.

அது மட்டுமல்லாமல், இந்திய நாடாளு மன்றத்தில் எந்தக் கட்சி பெரும்பான்மை பெற்று ஆளும் உரிமையை மேற்கொண்டாலும், மக்களின் உணர்வுகளை மதித்து நாடாளுமன்ற முறைகளை முழுமையாகச் செயல்படுத்துவதில் ஒரேமாதிரியான அசட்டை மனப்பான்மை காட்டுவது வாடிக்கையாகி விட்டதை நமது கழகப் பொருளாளர் தக்க ஆதாரங்களோடு எடுத்துக் காட்டிய நேரத்தில் மத்திய அமைச்சர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது இந்திரா கட்சி ஆனாலும் மொரார்ஜி தேசாய் ஆனாலும் இந்தித்திணிப்பு விவகாரத்தி ஒரே மாதிரியான நடவடிக்கைகளையே மேற்கொள்வதை அவர் சுட்டிக் காட்டியபோது தென் மாநிலப் பிரதிநிதிகள் அனைவரின் முகத்திலும் தனியான ஒரு 'களை' தட்டிற்று.

அதுமட்டுமல்ல; ஜனநாயகத்தில் கட்சிகளே இல்லாத அரசியல் முடிவு தேவை என்று வாதிட்டவர்களுக்கு. சாதிக் அவர்கள் பதில் கொடுத்த நேர்த்தி வெகுவானபாராட்டு தலைப் பெற்றது. ஜனநாயகத்தின் முக்கியஅம்சம் மெஜாரிட்டி மைனாரிட்டி என்பவை. இதில் எந்தக் கொள்கைக்கு மெஜாரிட்டி இருக்கிறது. எதற்கு மைனாரிட்டி ஆதரவு கிடைக்கிறது என்பதை கட்சி அமைப்புகளின் மூலமாக அல்லாது வேறு எந்த முறையில் அளந்து பார்க்க இன்றைய உலகம் தயாராக இருக்கிறது என்று அவர் ஆணித்தரமாகக் கேட்டபோது மண்டபமே அதிர்ந்த கரவொலி எழும்பிற்று.

கட்சி மாறுவதைத் தடுப்பதற்குக் கொண்டு வரப்படுவதாக அறிவித்துள்ள சட்டம் குறித்து திரு. சாதிக்பாட்சா அவர்கள் தெரிவித்த கருத்துக்களை ஏறக்குறைய அனைவருமே கவனமாகக் குறிப்பெடுத்தார்கள்.

அடுத்து நாடாளு மன்றத்தின் ஜனநாயக இயக்கம் ஒழுங்காக—சீராக இருக்க வேண்டுமானால், ஆட்சி மொழிப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும் என்றுதொடங்கிஇந்தித்திணிப்பால் ஏற்படும் ஆபத்தை அவர் ஒவ்வொன்றாக விளக்கிக் கொண்டுவந்தபோது தந்தை பெரியார், அறிஞர் அண்ணா டாக்டர் கலைஞர் ஆகியோர் கடந்த நாற்பதாண்டுக் காலமாக இடைவிடாது நடத்தி வரும் இந்தி எதிர்ப்புப் போராட்டக் களங்களின் காட்சிகள் வரிசையாக அனைவர் கண்முன்னிலும் நிழலாடின. இந்தியைஎதிர்த்துத் தங்களைத் தாங்களே எரிதழலுக்கு ஆளாக்கிக் கொண்ட அத்தனை தியாகிகளும் சாதிக் அவர்கள் அடுக்கிக் காட்டிய வாதத்தின் போது கூடியிருந்த தமிழர்கள் அனைவராலும் நினைவு கூரப்பட்டனர்.

சமுதாய ஏற்றத் தாழ்வுகள் பொருளாதார பாகுபாடுகள், ஜாதி வித்யாசங்கள் அத்தனையும் திரு. சாதிக் பாட்சா அவர்களின் வாதத்திலிருந்து அன்று தப்பவே இல்லை.

அத்துடன், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்பற்றிக் கருத்தறிவித்த சிலர், தாங்கள் ஏதோ புதியதொரு சித்தாந்தத்தைச் சொல்லும் பாவனையில் அன்று பேசினார்கள். அவர்களுக்குப் பதிலளித்த சாதிக் அவர்கள், இந்தக் கருத்து பல்லாண்டுகாலத்திற்கு முன்பாகவே அறிஞர் அண்ணா அவர்களால் தெரிவிக்கப்பட்டு, டாக்டர்கலைஞர் அவர்களால் அடிக்கடி நினைவு கூரப்படுவதுதான் என்பதை விளக்கியபோது அந்தக் கருத்தைப் புதுமையானதாக நினைத்துப் பேசியவர்களின் முகம் சுருங்கியதை பார்வையாளர்கள் கவனிக்கத் தவறவில்லை. ஆஸ்திரேலியாவிலும் ஜெர்மனியிலும் நடைமுறையில் உள்ள இந்தகு விகிதாச்சாரத்தை எல்லாக்கட்சிகளும் ஏற்று அதற்கேற்ப அரசியல் சட்டம் திருத்தப்படுமாஎன்று அவர் கேட்ட கேள்விக்கு அன்று சரியான விடை கிடைக்கவில்லை.

(பிற்பகுதி அடுத்த இதழில்)

சிக்மகளூர் கண்ட நெருக்கடி காலக் கெடுபிடிகள்!

இந்திரா காந்தி ஆட்சியின் நெருக்கடி காலக் கொடுமைகளுககுப் பலியான சிநேகலதாவின் மகள் நந்தனு, சிக்மகளூர் தேர்தலின்போது அனுபவித்த கொடுமைகளை விளக்கி 'சண்டே ஸ்டாண்டர்டு' ஆங்கில இதழில் எழுதியுள்ள அதனை தமிழாக்கம் செய்து வழங்குகிருர் திரு. கே. எஸ். தினகரன்.

சிக்மகளூரில் நடைபெற்ற மிருகத்தனமான தாக்குதல்களையும், அக்கிரமங்களையும் பின்னேக்கி நினைத்துப் பார்க்கும்போது. அவைகளை நம்பவே முடியாது. நெருக்கடி காலத்தில் நடந்தயதேச்சாதிகார வன்முறைகள் – அடக்குமுறைகள் – அனைத்தும் மீண்டும் – சுருக்கி ஒரு வாரகாலத்திற்குள் சிக்மகளூர் தொகுதியின் எல்லா இடங்களிலும் கட்டவிழ்த்து விடப்பட்டன. காவற்துறையினர் என் மீது தொடுத்தயதேச்சாதிகாரமான அடக்குமுறைகளையும்—இத்தொகுதி முழுக்க நடந்த வன்முறைகளையும் நினைவு கூர்கிறேன்.

திருமதி இந்திரா காந்தியின் அக்கிரமச் செயல்கள் அனைத்துக்கும் நேரடியாகவே எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பினேன்...வாக்காளர்களுக்கும் பொது மக்களுக்கும் அவரது யதேச்சாதிகாரக் போக்கினைப் படம் பிடித்துக்காட்டத் தீர்மானித்தேன். 'தாய்' என்றும் 'சகோதரி' என்றும் 'தாய்க்குலத்தின் வீராங்கனை' என்றும் போற்றப்படும் இந்திராவின் பொய் உருவைச் சிதைத்திட நினைத்தேன். அசிம்சை முறையிலும் அமைதியாகவும் என் எதிர்ப்பைத் துவக்கினேன.

முதலில். ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில் நடந்த கூட்டத்திற்குக் கறுப்பு உடை அணிந்துசென்றேன். கையிலே விளக்க அட்டை ஏந்தியவாறு (அதில் எழுதப்பட்டிருந்த வாக்கியம்; 'என் தாயைக் கொன்றது யார்?') இந்திரா நின்றிருந்த இடத்திலிருந்து இருபதடிகள் தள்ளியிருந்தேன். எனது பேச்சின் முடிவில் என்னைச் சுட்டிக் காட்டிய இந்திரா, எனது கண்களில் பகைமைக் கனல் வீசுவதாகவும், வெறுப்பும் அகிம்சையும் ஒன்று சேர இயலாது என்றும் உபதேசித்தார். இதற்காக காந்தியைக் கூட அவர் உதாரணம் காட்டிஞர்...! கன்னட மொழி தெரியாத இந்திராவுக்கு நான் ஏந்தியிருந்த அட்டையின் வாக்கியங்களை விளக்கினேன். அதற்குப் பதில் சொல்லாத அவர்தான் பேசும் கூட்டங்களில் கலவரங்கள் ஏற்படுத்த வெளி மாநிலங்களிலிருந்து ஆட்கள் வந்திருக்கிருர்கள் என்ருர்.

அடுத்து, சிருங்கேரியில் நடைபெற இருந்த இந்திராவின் கூட்டத்திற்கு நான் சென்றபோது போலீசார் மூன்று ஜீப்புகளை நிறுத்தி என் காரை வழிமறித்தனர் – இந்திராவின் மெய்க்காப்பாளர் ஏவிவிட்டபடி! இந்திராவின் தொண்டர்களால் செய்யப் படவேண்டிய இந்த இழி செயலைப்போலீஸ் அதிகாரிகள் செய்தது உண்மையில் நடைமுறையில் இல்லாத ஒரு ஈனச் செயலாகும்;

நான் எனது காரைச் செலுத்தி ஜீப் மீது மோதுவேன் என்று சொன்ன பிறகே போலீசார் ஜீப்புகளை அப்புறப் படுத்தி நான் செல்ல வழி விட்டனர்.

அன்று மாலை சிருங்கேரி அடைந்தேன். அங்கு என்னுடன் வேறு பன்னிரண்டு பெண்களும் சேர்ந்து கொண்டனர். எங்களது கைகளில் வாக்கியங்கள் அடங்கிய அட்டைகளை ஏந்தி, காந்தி திடலில் போடப்பட்டிருந்த திருமதி காந்தி பேசவிருந்த மேடைமுன் வீறுநடையுடன் சென்று, பொது மக்களைப்பார்த்தப்படி உட்கார்ந்தோம். இது இந்திரா காந்தியின் ஆதரவாளர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது காவற் துறையினரிடம் எங்களை அப்புறப்படுத்தும்படி அவர்கள் மேலும் மேலும் வற்புறுத்திஞர்கள்.

காவற்துறையினர் நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல் திணறிஞர்கள் அது ஒரு பொதுக் கூட்டம். எங்களுக்கு அங்கு இருக்க எல்லா உரிமைகளும் இருப்பதால் சட்டப்படி எங்களை அப்புறப்படுத்த வழி இல்லை. இருப்பினும் இ காங்கிரஸ தொண்டர்களின் அச்சுறுத்தல் அதிகமாகிக் கொண்டே இருந்ததனுல், என்னை அணுகி தாழ்மையோடு காவற் துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர். ஒரு உயர்தர காவற்துறைஅதிகாரி, நான் வெளியேறிச் சென்ருல் என் பாதங்களைத் தொட்டு வணங்குவதாகக் கூறியது எனக்கு விளங்காததும் பிடிக்காததுமாகும். ஒரு காவற்துறை அதிகாரி தனது கடமையைச்செய்ய வேண்டும் என்னைக்கைது செய்யவேண்டுமாயின். கைது செய்தாக வேண்டும். அவர் என்னைத் தாள்பணிந்து கேட்டுக்கொள்வதும் என் கால்களில் விழுந்து வணங்குவதாகச் சொல்வதும் எனக்கே புரியாக புதிராக இருந்தது.

ஆயினும், கூலிகொடுத்துச் சில பெண்களின் கையில், திருமதி காந்தியின் படம் ஒட்டிய, அட்டைகளை எந்தச் செய்து எங்களை முழுதும் பொது மக்கள் பார்வையிலிருந்து மறைக்கும்படிச் செரல்லி உட்காரச் செய்தனர் (இ) காங்கிரஸ ஊழியர்கள் எங்களைச் சுற்றிலும்வளைத்துக் கொண்டு அப்படியும் இப்படியும் அசையாத வண்ணம் பயமுறுத்திக் கொண்டே இருந்தனர், கடைசியில் திருமதி காந்தி வந்தார்; முதலில் பேசிய தேவராஜ் அர்ஸ எனது தாயாரின் மரணம் ஆஸ்துமா காரணமாகஎன்றும் அதற்குகாரணமாக இருந்தவர் ஜார்ஜ் பெர்ணுண்டஸ் என்றும் பேசினர் எனது வாயைத் துணியால் நான் கட்டியிருந்ததால் இவைகளுக்குப் பதில் கூறவோ எதிர்ப்புத் தெரிவிக்கவோ முடியவில்லை,

இது போன்ற சம்பவம்தான் குப்பா என்ற இடத்திலும் நடந்தது. ஆனுல் இங்கு ஆடவர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டனர் அவர்கள் யாவரும் அதிகப் படியான குடி போதையில் எங்களைத்தாக்கியும். எங்களது சேலைகளைக் கிழித்தும், எங்களிடம் தகாத முறைகேடான செயல்களைச் செய்தும், நாங்கள் ஏந்தியிருந்த விளக்க அட்டைகளை பிய்த்தும் எறிந்தனர்; இழிவான வார்த்தைகளால் ஏசினர்; சாராய வாடை அவர்களிடமிருந்து

(11-ம் பக்கம்பார்க்க)

திருச்சி அண்ணு அரங்கில்

23, 24—12—78 சனி, ஞாயிறு

இந்தி எதிர்ப்பு மாநாடு

தலைவர்: புலவர் கோவிந்தன் எம்.ஏ., எம் எல் ஏ
முன்னுள் சட்டப் பேரவைத் தலைவர்

திறப்பாளர்: வை. கோபால்சாமி எம்.ஏ, பி.எல்., எம் பி.

கழகத் தலைவர் கலைஞர்

பொதுச் செயலாளர் பேராசிரியர்

பொருளாளர் சாதிக்

துணை பொதுச் செயலாளர் ஏ வி. பி. ஆசைத்தம்பி எம். பி.

மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்பர்.

படத் திறப்பு:

பெரியார் —முததமிழ்க்காவலர் கி ஆ பெ விசுவநாதம்
அண்ணு —கி வீரமணி எம் ஏ ,பி எல்
பொதுச் செயலாளர். திராவிடர் கழகம்.
பாரதிதாசன் —கவிஞா முடியரசன்
அழகிரி —மன்னை நாராயணசாமி
இராமாமிர்தம் அம்மையார் —அலமேலு அப்பாத்துரை
தீக்குளித்த தியாகிகள்—இளம்பரிதி எம் எல் சி.

மாநாட்டு அமைப்புக்குழு

1. எம். எஸ். மணி
2. எம். எஸ். வெங்கடாசலம் எம்.ஏ. பி.எல்.,
3. கு. காமாட்சி
4. ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி
5. எஸ். வி. சாமியப்பன்
6. ஏ. மலர்மன்னன்
7. ஆ. துரைராசு முன்னுள் எம். பி.
8. த. ஆறுமுகம் எம். எல். ஏ.
9. கே. எஸ் முருகேசன் எம். எல் ஏ.

நிதிக்குழு:

1. ஏ. தியாகராசன் (காடுவெட்டியார்)
2. எஸ். நடராசன் எம். எல். ஏ.
3. எம். பாலகிருஷ்ணன் (திருச்சி)
4. கு. பாலகிருஷ்ணன் (தஞ்சை)
5. க. சிதம்பரம் (புதுக்கோட்டை)

விளம்பரக் குழு:

1. ஆர். நாகசுந்தரம் முன்னுள் எம்.எல்.ஏ.
2. ஜே.எஸ். ராசு பி.ஏ., பி.ஈடி., முன்னுள் எம். எல்.ஏ.

தொண்டர் படை:

1. எஸ்.ஏ.ஜி. ராபி–தலைவர்
2. கிரைதமிழ்ச்செல்வன்–துணைத் தலைவர்

தாழை மு கருணுநிதி,
பெரியண்ணன்
மாநாட்டுச் செயலாளர்கள்.

அன்பில் தர்மலிங்கம்
வரவேற்புக்குழுத் தலைவர்.

தென்னவர் முரசாம் தி. மு. கழகம்

திருச்சி
சக்ரவர்த்தி எம். ஏ.,

மறைமுகமாகத் திணிக்கப்படுகின்ற இந்தியை வெளிப்படையாக எதிர்க்க தி. மு. க. திருச்சியில் டிசம்பர் இறுதியில் திரள்கின்றது.

திராவிட முன்னேற்றக்கழகம் தமிழரின் நெடுநாள் கேள்விக்கு ஒரு நிலையான பதிலைத் தர முயலப் போகின்றது.

இந்தித்திணிப்பைஎதிர்த்த தி. மு. கழகம் இந்தியையே எதிர்க்க முடிவெடுத்து விட்டது. அந்த முடிவினை அறிவித்து முரசு கொட்ட முன்னேற்றக் கழகம் நடத்துவது தான் இந்தி எதிர்ப்பு மாநாடு!

இந்தி எதிர்ப்பு என்றதும் டெல்லியில் ஆள்பவர்கள் எகிறிக் குதிப்பது வாடிக்கையான ஒன்று!

ஆனால் இன்றைய நிலைமை மாறிவிட்டது. தென்னிந்தியாவில் அரசியல் பிரவேசம் நடத்திட நினைப்போர்க்கு இந்தி எதிர்ப்பு என்பது "விசா" வாகிப்பல நாட்கள் ஆகிவிட்டன.

இந்திக்கு ஆதரவு என்ற போர்வையுடன் தமிழகத்தில் எவருமே அரசியல் உலா வர முடியாது என்ற நிலை உருவாகி உள்ளது. இந்திக்கு வால் பிடித்து வக்காலத்து வாங்கியவர்கள்இன்றையதினம் எந்தப் பகுதியினர் மீதும் இந்தியைத் திணிப்பதை எதிர்க்கிறோம் என்று இந்தி எதிர்ப்பு பாவலா வாதிகளாகி இருக்கின்றனர்.

இந்திதான் இந்திய ஆட்சி மொழி என்று ஓங்கிக் குரல்

னர் தென்னக அரசியலில் தஞ்சம் புகுகின்றனர். இந்தியை ஆதரித்த அந்தக் கட்சியின் மாவீர தளபதிகள் இன்றைய தினம் இந்தி எதிர்ப்பு முரசு கொட்டுகின்றனர்.

அங்குமில்லை; இங்குமில்லை யென நடித்துக்கொண்டு அதே நேரத்தில் இந்தி எதிர்ப்பை மொழி வெறி எனப் பெயரிட்டு சர்வ சாதாரணமாகப்பேசிய சர்வதேசிய வாதிகள் இன்றைய தினம் இந்தியை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றுகின்றனர்.

இதற்கான ஆதாரங்களை மாற்றியிருக்கிறது. சில, உண்மைகள் வெளிப்படுவதற்கு வழியுமைத்துக் கொடுத்துவிட்டது.

1977 ம் ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பல்வேறுசிக்கல்களுக்குப் புதிய வழியினைத் தோற்றுவித்துள்ளது.

இந்தியாவின் மொழிச் சிக்கல் அதில் ஒன்றாகும், உண்மையில் மொழிப் பிரச்சினை என்ற ஒன்று தோன்றுவதற்கு நியாயமான காரணமில்லை. இந்தியாவிற்கு இணைப்பு

இன்றும்கூட தேசிய அடிவருடிகள் உண்டு.

இந்திராகாந்தியாலும், மொரார்ஜி தேசாய் ஆனாலும் இந்திமொழி விவகாரத்தில் ஒரே நிலையில்தான் இருப்பார்கள்,

இவர்களுக்குப் பின்னால் ஆளவருபவர்கள் கூட இந்தியை எதிர்ப்பவர்களாக இருக்க முடியாது. மாறாக இன்னும் வேகமாக இந்தியைத் திணிப்பவர்களாகத் தான் இருக்க முடியும்.

பிரதமராக வருபவர்கள்

இந்தியை எதிர்த்து

ளாக லெனின் கட்டுரைகளைக் கூட இவர்கள் திரட்டித் தருகின்றார்கள். "இந்தியைத் திணிக்க மாட்டோம் ஆனால் விரைவில் ஆங்கிலத்தின்இடத்திற்கு இந்தி வந்துவிடும்"— இது மொரார்ஜி மொழிந்தது.

"ஆங்கிலத்தை அகற்றுங்கள்; பின்னர் இந்தியாவின் ஆட்சி மொழி எதுவென முடிவு செய்வோம்"— இது ஜெகஜீவன்ராமின் நரித் தந்திரப் பேச்சு.

தன்னிடம் தரப்பட்ட வெளியுறவுத் துறையில் இந்

மொழி என்பது தவிர்க்க முடியாத ஒன்றுதான். ஆதிக்க வாதிகளின் மனப்போக்கே இந்தியாவில் மொழிப் பிரச்சினையை உருவாக்கியது

இந்திய விடுதலைப்போராட்டக் காலந்தொட்டு இப்பரந்த பூமிக்கு விடுதலை வேண்டி நின்றபொழுது வட

உத்தரபிரதேசத்தின் ஆதரவின்றி, பீகாரின் ஆதரவின்றி மற்றும் சில வட மாநிலங்களின் ஆதரவின்றி அந்தப் பதவியினைப் பிடிக்க முடியாது.

ஆனால் இந்தியாவின் மற்ற தென் மாநிலங்களின் ஆதரவின்றி பிரதமராகிவிட முடியும்.

இதனைத்தான் 1977—ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் நிரூபித்தது.

நடந்து முடிந்த ஆறாவது நாடாளுமன்றத் தேர்தலில்

திருச்சியில் திரள்கிறது!

கொடுத்தவர்கள் இன்று மூலையில் தூக்கி எறியப்பட்ட பின்னர் நான் அந்த அர்த்தத்தில் கூறவில்லை என்று ஓலமிடுகின்றனர்.

இந்தி எதிர்ப்பு இன்றைய தினம் தென்னிந்தியாவில்ஜனதாகாலூன்ற முடியாத நிலைமையினை உருவாக்கியுள்ளது.

இந்தியைத் திணித்துக் கொண்டே டெல்லியில் ஆட்சி செய்தவர்கள் இன்று ஆட்சியை இழந்து, வட மாநிலங்களில் செல்வாக்கு இழந்த பின்

தியை வேகமாகத் திணிப்பது வாஜ்பேயரின் மகத்தான மௌனசாதனையாகியிருக்கிறது இடையிடையே பிரிவினைவாதிகள் இந்தியை எதிர்க்கின்றனர் என்ற மேம் போக்கான பேச்சு!

இவைகளுக்கான காரணம் ஒன்றுதான். இந்தி எதிர்ப்பு என்ற சக்தி ஜனதாவினரை ஆட்டிப் படைக்க ஆரம்பித்து விட்டது. இந்தி எதிர்ப்பு வேகம் கண்டு இந்திராவும் அடங்கிப் போயிருக்கின்றார்.

நெருக்கடி நிலை பல காட்சி

நாட்டுத் தலைவர்களிடம் எல்லோரையும் உள்ளடக்கி நாமே ஆளவேண்டும் என்ற ஆதிக்கப் பேராசை குடிகொண்டிருந்தது. இந்தியாவைத் தாமே ஆள வேண்டும் என்ற ஆதிக்கப் பேராசை கொண்ட வட நாட்டுத் தலைவர்களிடம் அதற்கான பரந்த உள்ளம் இல்லாமல் போனதற்குக்காரணமே இந்தியாவை என்றென்றும் நம் இனத்தவரோ ஆள வேண்டும் என்ற எண்ணம் தான்.

அவர்கள் நம் மொழியைக் கற்றுக்கொண்டு நம்மிடம் உரையாட உறவாடத் தயாராக இல்லை.

ஏனெனில் அவர்கள் ஆள்பவர்கள்! அகில இந்திய அமைப்பின் கீழ் தமிழன் என்றென்றும் ஆளப்படுகின்றவனாகத்தான் இருக்க முடியும்.

அவர்கள் இடும் உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டிய நிலை தான் நமக்கு.

அதனால்தான் அவர்களின் இந்தி மொழியைப் படித்து விட்டு வந்து அவர்களிடம் வேலை பார்க்குமாறு நமக்கு ஆணைகள் வருகின்றன. இந்த ஆணைகளை ஏற்றுச் செயல்பட

நன்மைக்கோ அல்லது தீமைக்கோ தென் மாநிலங்கள் மாறுபட்டு வாக்களித்தன. தொடர்ந்து நடைபெற்ற மாநில சட்டசபைகளுக்கான தேர்தல்களிலும் அதேநிலைமை தொடர்ந்துள்ளது.

இது வட மாநில அரசியலை மையமாக வைத்துக் கொள்கைகளை வகுத்துக் கொண்டு இயங்கிய அரசியல் கட்சிகளுக்கு எதிரான நிலையாகும்.

இன்றைய நிலையில் நாடு இரு கூறுகப்பிரிந்து நிற்கிறது. இதனை ஆழ்ந்த அரசியல் அறிஞர்கள் அறிந்து வைத்திருக்கின்றனர்.

இந்த நிலை தொடர்கதையானால் விரைவில் இந்தித் திணிப்பின் உள்ளார்ந்தநோக்கங்கள் வெளியாகும், இதனை யாராலும் தடுக்க இயலாது: இந்தி வரவேண்டும் என்பது ஆதிக்கவாதிகள் பேராசை மட்டுமன்று.

இந்தித் திணிப்பு என்பது வட மாநிலச் சுரண்டல் வர்க்கத்தின் வியாபாரப் படையெடுப்பாகும்.

இன்னும் சொல்வதானால் அகில இந்தியச்சந்தை என்ற வியாபார நோக்கில் அதிகார வட்டத்தை கையில் போட்டுக் கொண்டு ஆள நினைக்கின்ற வர்த்தகச் சூதாட்டத்தில் என்றென்றும் கூட்டுக் கொள்ளைக்காரர்களாய் விளங்குகின்ற வடமாநில பண முதலைகளின் ஏகபோக உரிமைக்கான அனுமதிச்சீட்டு இந்தி மொழியாக இருக்க வேண்டும் என்பதற்கான முயற்சியாகும்,

ஆங்கிலேயர் ஆங்கிலத்தைப் பரப்பியது இந்த நாட்டை ஆள்வதற்கு மட்டுமல்ல. அவர்கள் நாட்டில் உற்பத்தியாகிற பொருள்களை இந்த நாட்டில் விற்றுக் கொள்ளையடிக்கவும்தான்.

இன்றையதினம் இந்தியாவின் பல பகுதிகள் இந்திவியாபாரிகளுக்கு வேட்டைக் காடுகளாக மாறி வருகின்றன.

இதனை சென்னையிலுள்ள வியாபாரிகள் நன்கு உணருவர். வட மாநிலங்களில்இருந்து வந்து இங்கு வட்டிக்கு விட்டு பிழைப்போர் வட மாநிலத்திலிருந்து வந்து வியாபாரம் செய்வோருக்குக் குறைந்த வட்டியிலும், நம் மாநிலத்தவருக்கு அதிக வட்டியிலும் கடன்கொடுப்பதை சென்னை வியாபாரிகள் நன்கறிவர்.

இந்தி ஆட்சி மொழியாவதைத் தமிழகம் மட்டுமே எதிர்க்கிறது என்ற நிலை மாறி இன்று தென்னிந்தியாவே தீவிரமாக எதிர்க்கிறது என்னும் நிலை பிறந்துள்ளது. இனி இந்த நிலையில் மாற்றம் எதுவும் இருக்காது. எப்படி வட மாநிலங்களில் இந்தி ஆதரவாளர்களுக்கு அரசியல் நடத்துவது சுலபமோ அதே

(தொடர்ச்சி 5 ம்– பக்கம்)

தொலைபேசி: கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

உரிமையாளர்
பே. தேவசகாயம்
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
கிளைகள்: 261, மேலமாசி வீதி, 70, சுவாமிசன்னதி
12, அழகர்கோவில் சாலை, 72 C, டவுன்ஹால்ரோடு, மதுரை.

M. K. TRADERS MADRAS-600024
தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்
H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் — பெண் கேன்வாசர்கள் தேவை.

★★★★★★★★★★★★★★★★★0★★★★★★★★★★

அசலும் போலியும்

★★★★★★[நெய்வேலி தியாகராசன் பி. ஏ.]★★★★★★

எந்த விலை கொடுத்தேனும் இலட்சியத்தை, நுண்ணறிவோடு, நிறைவேற்றுபவர்களே சிறந்த தலைவர்களாக விளங்க முடியும் என்பதையும், 'தலை' உள்ளவர்கள் எல்லாம் தலைவர்களாகிவிட முடியாது என்பதையும் உலக வரலாறு நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கின்றது.

வள்ளுவர் காலத்திற்கு முன்னுலேயே, அசலோடு, போலிகளும் கலந்திருந்த காரணத்தினுலேதான், நம்மை வழி நடத்திச் செல்லக்கூடிய தலைவர்களை நாம் தேர்ந்தெடுக்கும்போது. மிகமிக விழிப்போடிருக்க வேண்டுமென, எச்சரிக்கையே செய்கிருர், வள்ளுவப் பெருந்தகை'...

"இதனை இதனுல் இவன் முடிக்கு
மென்றாய்ந்து
அதனை அவன்கண் வி

என்கிருர். நமது டாக்டர் கலைஞர், திரைப்படத்துறையிலே புகுந்துபுரட்சியினைச் செய்த அந்த நாளிலே..." "திரும்பிப்பார்!" என்ற திரைப்படத்திலே வந்த "உண்மை வீரர்கள் வாழும் நாட்டினிலே — சில வெத்து வேட்டுகள் கலப்படம்" என்ற பாடல் வரிகளும் நினைவு கூரத்தக்கன...

அசல்எது?போலிஎது?-என்பதனைத்
தரம் பிரிதுதறிய. .
'ஒருபானைச் சோற்றுக்கு ஒரு
சோறு பதம்'

என்பதைப்போல...இதோ! ஒரு சில விளக்கங்கள்...

அசல்

1. ஆயிரம் இன்னல்கள் அடுக்கடுக்காக வந்திடினும் கொண்ட கொள்கையினின்றும் பின்வாங்க மாட்டார்.

2. பதினுன்காம் வயதிலே — பள்ளிப் பருவத்திலேயே அரசியலுக்கு வந்து, தந்தை பெரியாரிடமும், பேரறிஞர் அண்ணுவிடமும் அரசிடல் பாடங் கற்றவர்.

3. அரசியல் போராட்டாமென்ருல் முன் வரிசையில் நிற்பவர்.

4. சொற்பொழிவு, சிறுகதை, நெடுங்கதை கட்டுரை, கவிதை, திரைப்படம், நாடகம் நடிப்பு ஆகிய எல்லாத்துறையிலும்வல்லவர்

5. அண்ணுவின் மறைவிற்குப் பிறகு கட்சியை சனநாயக முறையில் வளர்த்து வருபவர்.

6. இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது அவரை அருகிலே வைத்துக்கொண்டே 'உரிமைக்குக்குரல் கொடுப்போம்,உறவுக்குக்கை கொடுப்போம்'' என முழங்கியவர்.

7. தம் கட்சியைச் சார்ந்தவரே மேயராக இருந்தபோதிலும், மாநகராட்சியில் ஊழல் குற்றச்சாட்டு வந்ததும் சிறிதும் பின் வாங்காமல் கலைத்திட உத்தரவிட்டவர்.

8. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பாளைச் சிறையிலே அடைபட்டுத் தியாக முத்திரை பெற்றவர்.

9, உளப்பூர்வமாக இந்தித் திணிப்பை அன்றும் எதிர்த்தவர், இன்றும் எதிர்ப்பவர்.

10. பகுத்தறிவை சொல்லிலும் செயலிலும் கடைப்பிடிப்பவர் தமதுமகனுக்குத் தாழ்த்தப்பட்டசாதியிலேபெண்ணெடுத்துக்கலப்பு மணத்தைச் செயலிலே செய்து காட்டியவர்.

போலி

1, தனக்கு ஒரு ஆபத்து என்ருல் கட்சியை மட்டுமல்ல, கொள்கையையே மாற்றிக் கொள்ளவும் தயங்காதவர்...

2; 1953-லே தி. மு. க.வுக்கு வந்தவர், தன்னலத்தைத் தவிர இலட்சியப் பிடிப்போ, கொள்கை உறுதியோ இல்லாதவர்.

3. போராட்ட 'முரசொலி' கேட்டதும் மாநிலத்தை விட்டே ஓடிவிடக் கூடியவர்.

4. நடிப்பு ஒன்றை மட்டும் – அதனையும் அரைகுறைடாகக் கற்றவர்...

5. கட்சி துவக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை தேர்தலே நடத்தாதவர். கட்சியிலும் ஆட்சியிலும் சர்வாதிகாரத்தையே விரும்புபவர்.

6, "ஜெயப்பிரகாசர் கொள்ளைக்காரர், மொரார்ஜி இலஞ்சம் வாங்கியவர்'' என்று மேடையிலே முழங்கிவிட்டுப்பிறகு மன்னிப்புக் கேட்டவர்.

7. புகைப்படச்சான்றுகளோடு – சட்டமன்றத்திலேயே ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டாலும் வாய்மூடி மௌனியாக இருப்பவர்

8. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பாவை ஒருத்தியோடு அயல்மாநிலம்சென்று திரைப்படக் காட்சியில் நடித்தவர்.

9, நெருக்கடி கால சட்டத்திற்குப் பயந்து 'WE ARE FOR HINDI' நாங்கள் இந்திக்கு ஆதரவாக இருக்கிறேம் என்ற எட்டப்பன் குரலுக்குச் சொந்தக்காரர்.

10, கையிலே தாயத்து—கழுத்திலே காஞ்சிப் பெரியவாளின் துளசிமாலை — கட்சிக்காரர் பச்சை குத்திக் கொள்ள வேண்டுமென்ற காட்டுமிரண்டித் தனமான அறிவிப்பு —

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

இந்தியை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்று இனி வருங்காலத்தில் தென் மாநிலங்களில் இந்தி எதிர்ப்பாளர்கள் மட்டுமே அரசியல் நடத்த முடியும் இதற்கு தமிழகத்தில் இந்திக்கு கொஞ்சமும்எதிர்ப்பு குறையாத நிலைமை சாட்சியாகும்.

மொழிப் பிரச்சினையைப் பற்றி எழுதும்பொழுது வட இந்தியப்பத்திரிக்கைகளேகூட இந்தியா ஒரே நாடாக தொடர்ந்து இருக்குமோ என்ற ஐயத்தைக்கிளப்பத்தவறுவதில்லை.

இதனை உணராமல், அல்லது உணர்ந்தும் உணராதது போன்று நடித்துக் கொண்டு மேலோட்டமாகவோ மெத்தனமாகவோ பேசிக்கொண்டு பதவியிலிருப்போர் எவ்வளவுக் கெவ்வளவு பெரிய பதவிகளில் அமர்ந்திருக்கின்ருர்களோ அவ்வளவுக் கவ்வளவு இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்து இருக்கின்றது. அவர்கள்தான் இந்திய ஒற்றுமைக்கு எதிரானவர்கள்.

இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டும் என்பது நான்கைந்து வட மாநில மக்களின் உணர்வு. அதனை வளர்த்து விட்ட குற்றத்துக்கு காங்கிரசும்இன்றையஜனதாத் தலைவர்களும் காரணமாவார்கள்

இந்தியை இந்தியப் பிரச்சினையாக ஆக்கி பெரும்பான்மை துணை கொண்டு சாதிக்கலாம் என்று நினைத்தால் இந்தியா என்பது நான்கைந்து வட மாநிலங்கள்தான் என்ற நிலை எதிர் காலத்தில் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது:

தொடர்ந்து இந்தியாவை ஒரே நாடாக வைத்திருக்க ஆங்கிலத்தைப்பயன்படுத்தியவர்கள் இந்தியத் தலைவர்களே!

இன்று ஆங்கில எதிர்ப்பை வளர்த்து அந்த இடத்தில் இந்தியை வைத்திட முனைகின்றனர்

ஆங்கிலேயர் ஆளாத இக்காலத்தில் ஆங்கில எதிர்ப்பு வளராது, ஆங்கில எதிர்ப்பை உருவாக்கி அந்நிலையை இந்திக்குச் சாதகமாக்கிட விரும்பினுல் மீண்டும் இந்தியா ஒரு நாடு அல்ல என்ற நிலைதான் வரும்,

எனவே இந்திக்கு ஆலவட்டம் சுற்றுவோர் திருந்திட வேண்டும் இந்தியா விடுதலை அடைந்ததும்இந்திதான்இந்தியாவின் ஆட்சி இணைப்பு மொழி என்று அறிவித்து இருப்பார்களானுல் இன்று இந்தியா ஒரு ஐரோப்பா கண்டமாக மாறியிருக்கும்.

ஒன்று இந்தியின் நலனைச் சிந்தியுங்கள்! அல்லது இந்தியாவின் நலனைச் சிந்தியுங்கள்! இரண்டையும் பற்றிச் சிந்திக்கத்தெனுட்டார் வடஇந்தியத்தலைவர்களைஅனுமதிக்கப் போவதில்லை என்று குரல் எழுப்பிவிட்டது.

இந்தி எதிர்ப்பு என்பது குறிப்பிட்ட ஒரு மொழியை எதிர்ப்பது என்பது அல்ல. இந்தி எதிர்ப்பு என்பது ஓர் ஆதிக்கத்தை எதிர்க்கின்ற நிலை. இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் மீது இந்தியைத் திணிக்கத் இந்தி ஆதிக்கவாதிகள் முனைகின்றனர்.

ஆகவே இந்திஆதிக்கத்தை எதிர்ப்பது தென்னக மாநிலங்கள் மீது மிருகபலம் என்ற வகையில் தனது பெரும்பான்மையினைக் கொண்டு ஆதிக்கம் செலுத்த முனைகின்ற வடவரை எதிர்க்கின்ற எதிர்ப்பாகும்.

இந்தியை எதிர்ப்பதன் மூலம்— அதற்காகப்போராடுவதன் மூலம் தமிழர்கள் அரசியல் சமஉரிமை பெற முடியும் என்பதனை உணர்த்திட—

இந்தியைத் தடுப்பதன் மூலமே வட இந்திய வாணிப சுரண்டலைத் தடுக்க முடியும் என்பதனை அறிவுறுத்த—

இந்தியை அடக்குவதில் தான் நமது உரிமை பிறப்பெடுக்கும் என்பதனை நிலை நிறுத்த—

இந்தி சாம்ராஜ்யத்தின் மறைமுகமான படையெடுப்பைத்தகர்த்தெறிய தி. மு. கழகம் முடிவெடுத்து விட்டது. அந்த முடிவினைச்செயல்படுத்த முனைந்திட திருச்சியில் கூடிடுவோம்.

இந்தியா சம உரிமை பெற்ற மக்களின் கூட்டாட்சி நாடாக இருக்கப்போகிறதா? அல்லது பல நாடுகளின் கூட்டமைப்பாக ஆகப் போகிறதா? என்ற கேள்வியினை ஆதிக்கவாதிகளின் மனத்தில் எழுப்புவோம்!

மொழிகாக்கத் தீக்குளித்த முதல்வன் சின்னச்சாமி கல்லறையில் தொழுது எழுவோம் மொழியுரிமை கொடியேற்றி முரசு கொட்ட சோழன் தலைநகரில் நெஞ்சுயர்த்திக் குரல் கொடுப்போம்!

டாக்டரை நேரில் சந்திக்க

முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம் உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற

பழனி டாக்டர்
எஸ். காளிமுத்து
R.M.P. (IND. V. V. C. A. I. H.)
பழனி — 624601

என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும். சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்

போன்: 316. 316 ஏ. 420 தந்தி: சித்தர்

கண்டதும் காதல் ஒழிக!



"முறுக்கு மசால்வடை!" "கரம் சாயா!"

"நாதன் சோடா, கலர், ஆரஞ்சு!"

"ரொட்டி, பிஸ்கத், வெத்தில பாக்கு. அசோகா!"

"எலிபெண்ட் சிகரெட், தாஜ்மகால் பீடி!"

"ஏய் சாயா! ஒரு சிங்கள் கொடுடா!"

"காலணு பீடி கொடு!"

"அம்மா ... எனக்கு ரொட்டி!"

"அப்பா...சோடா வாங்கித் தா"

"சும்மா இருடா கழுதை! ராத்திரியிலே சோடா செரிக்காது!"

"ஏய்! ஆரம்பிக்கிறியா இல்லையா?"

"ஆரம்பிக்கலேன்ன ...டிக்கட்டை வாபஸ்பண்ணுடா!"

"அர்த்தராத்திரியிலே ஆட்டம் போடுவானுவ போலிருக்கு"

"காலிப்பசங்கள்!...எல்லாரும் விடாமல் கை தட்டுங்கப்பா...அப்பதான் சீன் தூக்குவான்"

"ஏய்! விசிலடிக்கத் தெரியுமா?"

"நல்லா தெரியும். அதுக்குத்தானே நான் டிராமாவுக்கு வர்றது"

"அப்ப... ஆரம்பிச்சுடு"

"ஷ் ஷ் ஷ்...ஷ்..."

'ஓகோ கோ கோ உஷ்..."

தேவிகான சபையில் "திரௌபதி வஸ்திராபஹரணம்" நாடக ஆரம்பத் தினத்தன்று நாடக நேரம் தவறி நாழிகை நகர நகர நாலாபக்கங்களிலுமிருந்து கிளம்பிய பேரொலிகள் ஒன்றோடொன்று மோதித் தெறித்து அந்தக் கீற்றுக் கொட்டகையையே நடுங்க வைத்தன.

நாடக சம்பந்தமான ஒத்திகைகள் பார்ப்பதில் சுறுசுறுப்புத் தேவையில்லைஎன்ற கொள்கையுடைய நாடக முதலாளி, நடிகர்கள் அலங்காரம் செய்து கொண்டிருக்கும்போதுதான் சாட்சி ஒத்திகைகள் நடத்திக்கொண்டிருந்தார். அந்த அலட்சியத்தை அவர், தம் தொழில் மேதாவித்தனத்தைக் காட்டுகிறது என நம்பினார்.

இனிச் சமாளிக்க முடியாது என்ற ஆபத்தான கட்டத்தில் நாடகமணி ஒலித்தது. முதற்காட்சி பஞ்சபாண்டவர் ஆலோசனை மண்டபம். அவசரத்தில் அர்ச்சுனன் 'கதை'யையும் வீமசேனன் வில்லையும் தூக்கிக்கொண்டு வந்து நிற்கிறார்கள்.

"வீமசேனா" என்று தருமர் அழைக்கவும் வில் வைத்த ஆசாமி அண்ணா என வணங்கவும், கொட்டகை பூகம்பத்தால் ஆடுவது போலச்சிரிப்பு முழங்கிற்று. திரை சடக்கென விழுந்தது. ஆயுதங்களை அவர்கள் சரிப்படுத்திக் கொண்டபின் மீண்டும்திரை சுருண்டது. திரௌபதி குலுக்கு நடை போட்டுக் கொண்டு பிரவேசித்தாள் — கொட்டகையில் அமைதி.

"ஆள்...நல்ல அழகப்பா!"

"ஆமாம்! பாத்திரத்துக்கேற்ற முகவெட்டு"

"அலட்சியச் சிரிப்பு அப்படியே வழியுதுபார்"

"வழியும் வழியும்"

"என்னடா கிண்டல்?"

"கிண்டல்இல்லை...குமார்! நாடகக்காரி மேலேயே இப்படியென்றால்..?"

"நாடகக்காரியென்றால் மட்டமா? நளினம், நாகரிகம் பாவஉணர்ச்சி எல்லாம் அவளுக்கு அடிமை. வாழ்க்கையில் அவை வற்றிப்போகாமலிருக்க இவள் போன்ற கலையரசிகளின் காதலைத்தான் பெறவேண்டும்"

"அப்படியானால் — காதல் ஆரம்பமாகிவிட்டதுன்னு சொல்லு."

"ஆமாம்! கன்னியொருத்தியைக் கண்டதும்,

உள்ளம் களவு போவது தானே காதல்?'

"என்னடா கவிதைபொழிகிறாய்?"

"காதல் மழையடா செவிடு!"

"சரி பைத்தியம் ... முற்றிவிட்டது"

யார் பைத்தியம்? முட்டாள்! இது கண்டதும் காதல்!

'குமார்!"

'நடராஜ் என்னைத்தொந்தரவு செய்யாதே. உன் பேச்சைக் கேட்க நேரமில்லை. அவள் வாய் திறக்கப்போகிறாள்"

"இந்த எழுத்தாளர்களே இப்படித்தான்" முணுமுணுப்போடு நடராஜ் நாடகத்தைக் கவனித்தான்.

குமார், புயலும் படகுமானான்.

"இந்த முட்டாள் தருமன் ஒரு மரக்கட்டை மகாராஜா தங்க விக்கிரகம் வந்து நிற்கிறது! தழுவிடாமல் தர்பார் நடத்துகிறானே" என ஏளன மொழி பேசிற்று அவன் உள்ளம்.

"நான் மட்டும் தருமனாய்; தருமன் என்ன, சகாதேவனாய் நடித்தால் கூடப் போதும்...இந்நேரம் இந்தச் சிங்கார மயிலை!..." குமார் சுரக்கும் உமிழ் நீரை உறிஞ்சிக் கொண்டான்.

"சரி, நாளைக்கே இந்தச் சபாவில் ஒரு நடிகனைச் சேர்ந்து விடுவது" மகோன்னத முடிவைக் கண்டு பிடித்ததுபோல அவன் தலை நிமிர்ந்து கொண்டது.

வீமசேனனிடம் வசனம் முடிந்த பிறகு, தருமர் திரௌபதியை நோக்கினார். திரௌபதி வணங்கி நின்றாள். மலர்ந்த முகத்தோடு தருமர் அவளைப் பார்த்து, "அன்பே! சீதா! அருகில்வா!" என்று முடிக்கவில்லை; கொட்டகை "சே உள்ளே போடா!" என்று சிரித்தது.

முதல் நாள் நடந்த 'இராமாயணம்' நாடக வசனத்தைத் தருமர் வேடம் போட்டவர் இப்போது தவறிச் சொல்லிவிட்டார் என்று

கருணாநிதி

யாரும் மன்னிக்கத் தயாராயில்லை. கொட்டகை தருமருக்குத் தடையுத்தரவுபோட்டதும், அவர் மௌன விரதம் ஆரம்பித்துவிட்டார். மிரள மிரள விழித்தபடி திரௌபதி நின்றாள். தருமர் வசனத்தை நாமாவது பேசுவோமென்று அர்ச்சுனன் வேஷக்காரன் "அன்பே, திரௌபதி அருகில் வா! என் தம்பி அச்சுசுணன் திக் விஜயம் செய்யப் போகிறானும்..." என்று ஆரம்பித்தான்.

"ஏய்! நீயும்உள்ளேபோ!" கொட்டகை ஆத்திரத்தோடு உத்தரவு போட்டது.

நாடக முதலாளி புஷ்பராகம் பிள்ளை மேடைச்குஓடி வந்து ... "சகோதரர்களே" என்று எடுத்தார்.

ஐவரும் உள்ளே ஓடினர். "ஏய் பஞ்சபாண்டவர் ஓட்டம். திரௌபதி தனியா நிற்கிறாள். பிடி பிடி!" கொட்டகையில் கெக்கலிப்பு.

"திரௌபதியும் உள்ளே ஓடினாள். திரை விழுந்தது. கொட்டகையில் யாரும் உட்கார்ந்திருக்கவில்லை.

முன்திரையில்காட்சியளித்துக்கொண்டிருந்த காளிகா தேவியின் முகத்தில் ஒரு கல் வந்து விழுந்தது. "ஐயோ முறையோ" வெனக் கூவியபடி பெண்கள் திசைகெட்டு ஓடினார்கள்.

கீற்றுகளைக் கிழித்துக் கொண்டு கற்கள் உள்ளே நுழைந்து கொண்டிருந்தன. நாடகமுதலாளி ஒலிபெருக்கி மூலமாக உள்ளிருந்தபடி கத்தினார்; பயனில்லை. 'நீங்களெல்லாம் மனிதர்கள் தானா?' என்று ஒலிபெருக்கி கேள்வி போட்டது. அதற்கும் பதில் வரவில்லை. ஆனால் ஒலிபெருக்கிமட்டும்உடைந்து விழுந்தது. காவற்காரர்களுக்கும் பொதுமக்களுக்கும் கைகலப்பு.

"டேய் பாரத யுத்தம்!" என்றான் ஒரு கிண்டல்காரத் தடியன். இதற்குள் யாரோ ஒருவன் நெருப்புக் குச்சிக்கு வேலை கொடுத்துவிட்டான். "லங்காதகனம்" நாடகம் ஆரம்பமாயிற்று! தீ வளர்ந்து தாவியது. முதலாளியைக் காணவில்லை.

காளிதேவி திரை தீப்பிடித்துக் கொண்டது. கொட்டகை முறிந்து எரிந்தபடி சாய்ந்தது. பக்கத்திலிருந்த வயற்புறத்தை நோக்கி நடிகர்கள் சிதறினர். 'நடராஜ்' என்று கத்திப்பார்த்தான் குமார். தன் உள்ளக்கோயில் கொண்ட அந்தக் குயில் வெந்து கருகிவிடுமோ என்ற குமுறல் எழுந்தது அவனுக்கு 'என்கோமளவல்லி எங்கே' யென ஓடினான். அப்போதுதான் திரௌபதி சிங்காரிப்பு அறையை விட்டுப் பறந்து கொண்டிருந்தாள், குமாரும் தொடர்ந்தான் ... கொட்டகையில் தீ! குமாரின் இதயமெல்லாம் தீ! — அந்தத் தீ— தீங்கனியாக மாறப்போகிறதென்ற ஆசை அவனைக் காற்றுக்கிற்று.

ஓடிக்கொண்டேயிருந்த திரௌபதி ஒரு வரப்பில் தடுக்கி விழுந்தாள். அவனும் விழுந்தான். அவன் இதயராணிக்குப் பேச்சுமூச்சில்லை

குமார் அவளைத் தன் மடியில் சாய்த்துக்கொண்டு அவள் கன்னங்களைத்தடவிக்கொடுத்தான். துண்டை எடுத்து முகத்தில் விசிறினான், நெஞ்சைத் தடவிக்கொடுத்தான் சில நிமிடங்கள் மௌனம்,

"கண்ணே!"

கட்டு மீறியெழுந்த அந்த வார்த்தை...ஒரு பெருமூச்சுடன் கலந்து கொண்ட அவன் கலையரசியின் தலையை உலுக்கினான். திரௌபதி தெளிவு பெற்று எழுந்து உட்கார்ந்தாள். வெகு தூரத்தில் எரிந்துகொண்டிருந்த கொட்டகையின் செந்நிற ஒளியில், தன் காதலியின் தங்கமேனி மெருகேறுவதைரசித்தபடியே குமார் அசைவற்றுவிட்டான்

அவள் நன்றாக நிதானம் பெற்றுவிட்டாள், குமாரின் குதூகலம் கொள்ளிடத்து வெள்ளமாயிற்று. "கண்மணி!" என்று அவளைக் கட்டியணைத்தான்...

"திரௌபதி சிரித்துக் கொண்டே, தன் தலையில் கைவைத்து 'டோபா' முடியை எடுத்தான்!"

ஏற்றிடுக, என் வேண்டுகோள்!



உடன்பிறப்பே

பத்து நாட்களுக்கு மேலாகிறது உன்னுடன் கடிதத் தொடர்பு கொண்டு! சிறிய அளவு அறுவை சிகிச்சை தான்! எனினும் தொல்லை அதிகம்! எத்தகைய வேதனைகளையும் உன் அன்பு முகத்தை எண்ணுவதாலேயே தாங்கிக் கொள்ளக்கூடிய பக்குவத்தை; இன்று நேற்றல்ல— பல ஆண்டுகளாகவே பெற்றிருக்கிறேன் அல்லவா?

சுமார் பத்து நாள் செய்திகளை நாளேடுகள் என் படுக்கை தேடி வந்து கூறிக் கொண்டுதானிருக்கின்றன, மிரட்டிக் கொண்டிருந்த புயல் கொந்தளிப்பு, இறுதியாக இலங்கைச் சீமையில் நுழைந்து பெரும்பாலான தமிழர்கள் உள்ளிட்ட இலங்கை மக்களை விழுங்கிவிட்டிருக்கிறது. தமிழகத்திலும் மண்டபம், இராமேஸ்வரம் போன்ற முகவை மண்டிலப் பகுதிகளிலும், தஞ்சை, மற்றும் சில மாவட்டங்களிலும் — மீண்டும் உதகையிலும் பெருங்காற்று, வெள்ளம் புகுந்து மக்களின் உயிருக்கும் உடமைகளுக்கும் பெருஞ்சேதம் இழைத்துள்ள செய்திகள் நெஞ்சைக் குலுக்குகின்றன.

இலங்கையில் துயர்துடைப்புப் பணிகளுக்காக இந்தியாவின் சார்பில் நூறு டன் அரிசியும், பத்தாயிரம் போகளுக்குத் துணியும், மற்றும் கூடாரத் துணிகள் போர்வைகளும் மத்திய அரசால் அனுப்பிவைக்கப்படுகிறது என்ற செய்தி பாராட்டத்தகுந்ததாகும். ஏற்கனவே இலங்கையின் வேண்டுகோளுக்கேற்ப மத்திய அரசு இலங்கைக்கு ஆவ்ரோ விமானமும், ஹெலிகாப்டரும் அனுப்பி வைத்துள்ளது. தமிழக அரசின்சார்பில் மத்திய அரசு மூலமாக பத்து லட்ச ரூபாய் மதிப்புள்ள துயர்துடைப்புப் பொருள்களை இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தமிழக நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் அறிவித்திருப்பதும்வரவேற்கத்தக்கஒன்றாகும்

இந்திய அரசோ. தமிழக அரசோ, மற்ற நாடுகளோ இலங்கைக்குச் செய்யும் உதவிகள் தார்மீக உணர்வுகளைப் புலப்படுத்தப் பயன்படுமேயல்லாது இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுஞ்சேதக்திற்கு முழுமையான பரிகாரம் வழங்கிட இயலாது. ஆகவே இலங்கை அரசாங்கம், துயர் தணிப்புப் பணிகளுக்காகப்பெருந் தொகையைச் செலவிட முன்வரவேண்டும்.

இலங்கையில் பெரும்பாலும் தமிழ்மக்கள் வாழும் பகுதிகள் கடல் அலைகளின் பெருந்தாக்குதலுக்கும் புயலின் சீற்றத்துக்கும் உள்ளாகியுள்ளன. தொடர்ந்து பலவேதனைகளுக்கு ஆளாகிவரும் இலங்கைத் தமிழர்களுக்கு இப்படியொரு இயற்கையின் சோதனையும் ஏற்பட வேண்டுமா? ஏக்கப் பெருமூச்சுதான் விடையாகக் கிடைக்கிறது!

மூத்தோர், முதியோர், இளையோர், மழலைகள் என எத்தனை எத்தனை உயிர்களைக் கடலும் காற்றும் தங்கள் கொடுமைக் கரங்களால் பிணங்களாகக் குவித்திருக்கின்றன! தம் குடும்பச் செல்வங்களை இழந்து கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் இலங்கை மக்களுக்கு அதிலும் பெரும்பாதிப்புக்கு ஆளாகியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு உலகநாடுகள் பலவற்றிலும் பரவிக்கிடக்கும் தமிழ் இனமக்கள் தங்கள் ஆறுதலைத் தெரிவிக்கவும்— தாங்கள் வாழுகின்ற நாடுகளில்உள்ள அரசுகளின்மூலம் முறைப்படி நிவாரண உதவிகளை வழங்கிடவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். தார்மீக அடிப்படையில் — மனிதாபிமான உணர்வுடன் அளிக்கப்படும் ஆறுதலும் சிறிய உதவிகளும்கூட பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நம்பிக்கையூட்டத்தக்க வகையில் அமையும்!

தி. மு. கழகத்தின் சார்பில் அடையாள பூர்வமாகவும் ஆழ்ந்த உணர்வோடும்நிவாரண நிதித்தொகையை இலங்கைக்கு வழங்க, முறைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. புதிதாக அல்ல; கழகம் உருவான இரண்டு ஆண்டுகளில் தஞ்சையில் வீசிய புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருபத்தேழு ஆண்டுகட்கு முன்பே நாற்பதாயிர ரூபாய் நிதி திரட்டி அரசிடம் வழங்கிய வரலாறு நமக்குஉண்டு! தொடர்ந்து கடந்த முப்பதாண்டுகளில் எதிர்க்கட்சியாக இருந்த நிலையிலும், ஆளுங்கட்சியாக இருந்த நிலையிலும். மீண்டும் எதிர்க்கட்சியாக இருக்கும் நிலையிலும் இதுபோன்ற இயற்கையின் சீற்றத்தால் இன்னலுற்றோர்க்கு இயன்ற உதவிகளைச் செய்திட கழக அமைப்போ, கழக அரசோ. கழக உடன்பிறப்புக்களோ தயக்கம் காட்டியதில்லை.

சென்ற ஆண்டு புயலால் தமிழகம் சீரழிந்து நின்ற போது, சிறையிலிருந்து விடுத்த என் வேண்டுகோளையேற்று நான்கு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை நிவாரண நிதிக்கு வாரி வழங்கி அதனைக் கழகத்தின் சார்பில் ஆளுநரிடம் தந்த நிகழ்ச்சியை யாரும் மறந்திருக்க இயலாது.

துயருற்றோரைக் கண்டு துடித்து ஓடிச் சென்று உதவிகளைச் செய்து பழக்கப்பட்ட செயல் வீரர்களின் பாசறை நமது கழகம்! அந்தக் கழகத்தின் சார்பில் இப்போது சிறிய அளவு நிவாரணத் தொகை இலங்கைக்கு முறைப்படி அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

இதைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள தமிழர்கள் மட்டுமின்றி உலகு முழுவதும் பரவிக் கிடக்கிற தமிழ் மக்கள் தங்களால் இயன்ற உதவிகளை, பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உடனடியாக அளித்திட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

"உலகில் உள்ள தமிழர்களையெல்லாம் கேட்டுக் கொள்ள உனக்கென்ன உரிமை?' என்று யாரும் வினவ மாட்டார்கள் என்றே நம்புகிறேன்

ஏனெனில், இலண்டனில் இருக்கிற தமிழர்களாயினும்—நியூயார்க்கில் இருக்கிற தமிழர்களாயினும் — அவர்கள் எல்லாம் கருணாநிதிக்கு வேண்டியவர்கள் என்று நமது முதலமைச்சர் அவர்கள் அந்த நாடுகளுக்கே சென்று அறிவித்திருக்கிறார்.

படுக்கையிலிருந்தவாறு பத்து நாட்களாகப் படித்த செய்திகளில் அதையும் கண்டு களித்தேன்! கவலைக்கிடையிலேயேயும் ஒரு தேன்துளிபோல அந்த அறிவிப்பு இருந்தது அதனால் மட்டுமல்ல; வேண்டுகோள் விடுக்க நான் உரிமையெடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இது உறவென்னும் உணர்வின்பாற்பட்டது! எனவே எங்கு வாழும் தமிழராயினும் அவர்கள் வழங்கும் சிறிய நிவாரணம்; அவர்கள் வாழும் நாட்டின் முறைகளுக்கேற்ப—இலங்கை நோக்கிச் செல்லட்டும்!

கலைஞர் கடிதம்

தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள புயல் வெள்ளச் சேதப் பாதிப்புகளுக்கு நிவாரணம் தேட முதல்வர் தனது சுற்றும்பயணத்தை இடையிலே முறித்துவிட்டு உடனடியாகத் தமிழகம் திரும்ப வேண்டுமென இங்குள்ள கட்சித் தலைவர்கள் சிலர் வெளியிட்டுள்ள அறிக்கைகளையும் ஏடுகளில் கண்டேன்!

இந்தத் தலைவர்கள் ஏன்இப்படி அவசரப்படுகிறார்கள் என்று தெரியவில்லை! முதலமைச்சர் முழுமையாகத் தான் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டே வெற்றிகரமாகத் திரும்பட்டும்!

எமர்ஜன்சி (நெருக்கடி நிலை)யின் தேவையையும் அதனால் விளைந்த நன்மையையும். எமர்ஜன்சி காலத்திலேதான் ஒரு மாநில அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியும் என்ற அரசியல் சட்ட விளக்கத்தையும், சர்க்காரியா கமிஷன் விசாரணை, தண்டனை போன்றவற்றையும் இங்கிலாந்து, அமெரிக்க ஆகிய இரு நாடுகளில் மட்டுமே எடுத்துரைத்திருக்கிறார். இன்னும் என்னைப் பற்றியும், கழகத்தைப்பற்றியும் நடத்த வேண்டிய தாக்குதல்களை ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் தொடர்ந்து நடத்த வேண்டாமா? அவற்றையெல்லாம் முடித்துக்கொண்டு சுற்றுப் பயணத் திட்டத்தில் ஒருநாள் கூடக் குறையாமல் முதல்வர் எம். ஜி. ஆர் தமிழகம் வருவாராக'

உடன்பிறப்பே!

கடிதத்தை மீண்டுமொருமுறை படித்து வெளிநாடுகளில் வாழுகின்ற உன் உற்றார் உறவினர்க்கு என் வேண்டுகோளைத் தெரிவித்து இலங்கையில் திக்கற்று நிற்போருக்கு— தேம்பி அழுவோர்க்கு — அவர்களால் இயன்ற உதவிகளை அனுப்பிட வழிகண்டிடு! நமது கழகமும் வெளிநாடு வாழ் தமிழர்களுடன் தொடர்பு கொண்டு இந்த ஆக்கப்பணி நிறைவேற ஆவன செய்யும்.

அன்புள்ள,

மு. க.

அசல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

11. சாதனைகளைப் புரிந்து சரிதத்தில் தன்பெயரைப் பொறித்தவர்.

12. நெருக்கடி காலச்சட்டம் அமுலிலிருந்த போதுகூட சனநாயகத்தைக் காக்கத் தன்னந்தனியராக அண்ணா சிலையருகில் நின்று 'சனநாயகம் வாழ்க! எழுத்துரிமை வாழ்க! என முழங்கித் துண்டறிக்கை வழங்கியவர்.

13. மே தினத்திற்கும் விடுமுறை அளித்து தொழிலாள சமுதாயத்தின் மதிப்பை உயர்த்தியவர்.

14. அயராத கழகப் பணிக்காக அண்ணாவிடமே கணையாழி பெற்றவர்.

15. பூம்புகார், கட்டபொம்மன் கோட்டை, வள்ளுவர் கோட்டம் போன்ற செயற்கரிய செயல்களால் நிலைத்த புகழ் பெற்றவர்.

16. 'தான் ஆடா விட்டாலும் தன் தசையாடும்' என்பதற்கொப்ப காமராசரைக் கைது செய்ய வேண்டிய நெருக்கடி எனக்கு ஏற்பட்டால், முதலமைச்சர் பதவியிலிருந்தே விலகுவேன்' என்றுகூறி தமிழ் மரபு காத்தவர்.

17. கழகத்திற்காக வசூலிக்கும் ஒவ்வொரு காசுக்கும் கணக்குக் காட்டியவர்.

18. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறுமல் அண்ணாவின் வழியில் அயராமல்உழைப்பவர்.

19. அண்ணா தமிழர்களுக்களித்து விட்டுச் சென்ற உயிலான மாநில சுயாட்சிக்காக, எத்தகைய இன்னல்கள் எதிர்ப்பட்டாலும் கலங்காது போராடுபவர்.

20 தமது பிறந்த நாளின்போது ஆண்டுக்கொருதிட்டத்தைஅறிவித்துச்செயல்படுத்தி ஏழை எளிய, நடுத்தர மக்களை மகிழ்வித்தவர்.

போலி

திருப்பதி மொட்டைக்கு ஆசிர்வாதம் 'ETC...ETC' ஆனால், மூச்சுக்கு முந்நூறு தடவை 'அண்ணா நாமம் அய்யா நாமம்... வாழ்க!' என்று சொல்லத் தயங்காதவர்.

11; சாதனைகள் செய்ய முடியாவிட்டாலும் சாதனை புரிந்தோரின் பெயர்களை அப்புறப்படுத்துவதில் மிகுந்த சுறுசுறுப்புக் காட்டியவர்

12. மாநிலக் கட்சிகள் இனித் தடை செய்யப் படுமென்று அன்றைய பிரதமர் எங்கோ பேசினார் என்று யாரோ சொன்னதற்காக இரவோடிரவாகக் கட்சியின் பெயரையே மாற்றிக் கொண்டவர்.

13. விவசாயி, தொழிலாளி பற்றி நடிக்கும் படங்களிலே அவர்களுக்காக முதலைக் கண்ணீர் சிந்திவிட்டு, துப்பாக்கி முனையிலேயும் தடியடி, கண்ணீர்ப்புகையினாலேயும் அவர்களது நியாயமான உரிமைப் போராட்டங்களை ஒடுக்கியவர்.

14 அண்ணாவுக்கே கார் தர மறுத்தகோடு அண்ணா தந்த எம் எல், சி. பதவியையே உதறி எறிந்து அண்ணாவுக்கும் கழகத்திற்கும் அழியாத அவமானத்தைத் தேடித் தந்தவர்.

15. தமிழர்களுக்கிடையே வன்முறையைத் தூண்டி அவர்களுடைய அழிவுக்கும், தனது வளத்திற்கும் வழிகாண்பவர்

16. முன்னாள் பிரதமருக்குக் கறுப்புக்கொடி கட்டியதற்காகவே. முன்னாள் முதல்வரென்றும் பாராது சிறையில் வைத்து மனம் மகிழ்ந்த அற்ப குணம் படைத்தவர். தமிழ்ப் பண்புக்கே களங்கத்தை உருவாக்கியவர்,

17. கணக்குக் கேட்டதற்காகவே வெளியேற்றப்பட்டேன்' என்ற பச்சைப் பொய்யைச் சொல்லி வெளியேறினாலும். தன்கட்சிக்காரர்களுக்கே கூட கட்சிக் கணக்கைக் காட்டாதவர். 13 இலட்சம் வரிபாக்கியை ஒரே ஆண்டில் எந்த வருமானமுமில்லாமல் சரிக்கட்டிய தீரர்.

18, எதிர்க்கட்சிகளை எதிரிக் கட்சிகளாக மதிப்பதே...கண்ணியம்! அவைகளை அழித்து ஒழிப்பதே கடமை'...சமயத்திற்கேற்றவாறு பச்சோந்தியாக வாழ்வதே கட்டுப்பாடு என்று வாழ்பவர்.

19 'மாநில சுயாட்சி'யை அண்ணாவே கேட்கவில்லை என்று மக்களிடையே பச்சைப் பொய்யை உதிர்த்தவர்

20 தனது உண்மையான வயது கூட மக்களுக்குத் தெரியக்கூடாது என்று மறைப்பவர். தனது உடற்குறைகள் மக்களுக்கு எந்தவிதத்திலும் தெரிந்துவிடக்கூடாது என்பதிலேயே மிகவும் விழிப்பாக இருப்பவர் மொத்தத்தில் மக்களைச் சுலபமாக ஏமாற்றி வாழ்பவர்,

எத்தனையோ துறைகளில், உலகத்திற்கே வழிகாட்டிய தமிழினம் இன்று—விளக்கைப் பிடித்துக் கொண்டே கிணற்றில் விழுகின்ற பரிதாப நிலைமைக்கு ஆளாகலாமா? யானையைப்போல தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளலாமா?

அசல் எது? போலி எது? என்று அறிந்தும் தெரிந்தும் தொண்டாற்ற காலமாவது வழிகாட்டுமா?

ரஜினீஷ் - இந்திரா நட்பு மகிமை

கடவுள் சர்வ சக்தி வாய்ந்தவர் என்று கூறப்படுவதால், அவன் நிச்சயமாக ஒரு சர்வாதிகாரியாகத்தான் இருக்க முடியும். இயற்கையாகவே, எல்லா சாமியார்களும், சர்வாதிகாரிகளுக்குத் துதிபாடுபவர்கள்தான். பல இலட்சக்கணக்கான யூதர்களை ஒழித்து, ஹிட்லர் கிறிஸ்துவத்தை பரப்ப முயன்றபோது, போப் அவருக்கு ஆசீர்வாதம் அளிக்கவில்லையா? எனவே, ஆச்சாரிய ரஜினீஷ் "இந்தியாவில் இந்திராவைப்போல் துணிவானபிரதமர்இருந்ததில்லை" என்று கூறியிருப்பதில் ஆச்சரியமில்லை.

இந்திரா குடும்பக்கட்டுப்பாட்டில் துணிவான முடிவை எடுத்ததால்தான் தோற்கடிக்கப்பட்டார் என்று ரஜினீஷ் கருதுகிறார். "இந்திய அதிகார வர்க்கம் வேலை செய்யவேண்டும்என்று இந்திரா வற்புறுத்தினார் யாரும் வேலை செய்ய விரும்பவில்லை. எனவே அவர்களுக்கு ஆத்திரம் வந்துவிட்டது" என்றும் ரஜினீஷ் கூறியிருக்கிறார். ரஜினீஷ் ஆசிரமத்தில் சில நடவடிக்கைகளை டெலிவிஷனில் படம்பிடிக்க வெளிநாட்டுக் குழுக்களுக்கு ஜனதா அரசு அனுமதி மறுத்துவிட்டது. எனவே இந்த ஆச்சாரியாருக்கு அரசாங்கத்தின் மேல் கோபம் கொதித்து எழுந்துவிட்டது.

ரஜினீஷ் ஆசிரமத்தில் என்ன நடக்கிறது? "கஜிராஹோ இந்த ஆசிரமத்தில் பிறந்திருக்கிறார்" இது ரஜினீஷ் சொல்லியவார்த்தை நிர்வாணம், தடைகள் இல்லாது உடல் உறவு, காமவெறி, காட்டுமிராண்டிக் காலத்து உடல் உறவு முறைகள் ஆகியவைகள் எண்ணச் சுதந்திரம் என்ற போர்வையில் தாராளமாக இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. செக்ஸ் வழியாக கடவுளை அடைவதுதான் இவரின் தாந்திரீகம்.

"ஒரு தம்பதி ஆழமான காதலில், உடலுறவில் ஈடுபடும்போது ஏதோ ஒரு கடவுளின் சக்தியைப் புரிந்து கொள்ள முடிகிறது" என்கிறார் ரஜினீஷ்

கீழ்த்தரமான காமக்களியாட்டங்கள் மதம் என்ற லைசென்சின் பெயரால் நடக்கிறது என்ற

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

★ தொழிலாளர் பிரச்சினையில் கலைஞரின் அணுகுமுறை ★

தி.மு.க. ஆட்சி காலத்திலும் சரி, அதற்கு முந்திய ஆட்சி காலங்களிலும் சரி தொழிலாளர் பிரச்சினைகளில் மோதல் என்றால் அழைத்துப் பேசித் தீர்ப்பார்கள்.

கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்த காலத்தில் பிரச்சினை இருந்தது. சிம்சன் தொழிலாளர்கள் பிரச்சினையில் தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் கூடி 'பந்த்' நடத்துவது என்று முடிவு செய்தோம். முதல்வர் கருணாநிதிக்கு இந்தத் தகவல் மாலை ஐந்து மணிக்குக் கிடைத்தது

அவர் உடனே ரேடியோ ஸ்டேஷனுக்கு ஓடி தொழிற்சங்க போராட்டத்தை ஒடுக்குவேன், எதிர்க்கட்சிகளை நசுக்குவேன் என்று முழங்கவில்லை. போலீசாரையும், குண்டர்களையும் திரட்டி அடக்க முயற்சிக்கவில்லை சவால் விடவில்லை.

எனக்கு இரவு 7-30 மணிக்குடெலிபோன் செய்து, தான் தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லோரையும் சந்தித்துப்பேச விரும்புவதாக கூறினார் பந்த் வேண்டாம், அதை கைவிடுங்கள் எனக் கேட்டுக் கொண்டார்.

இரவு எட்டரைமணிக்குநாங்கள் அவரைச் சந்தித்துப் பேசினோம். ஒன்றரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடந்தது. எங்கள் கோரிக்கைகளை அன்று முதல்வராக இருந்த கருணாநிதி ஏற்றார். நாங்கள் 'பந்தை' கைவிட்டோம். இரவே தொழிற்சாலைகளுக்கு தகவல் அனுப்பினோம். தொலை தூரத்தில் உள்ள ஊர்களுக்கு டெலிபோன் செய்தோம். 'பந்த் ரத்து என்று அறிவித்தோம்.

—மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான வி. பி. சிந்தன்.

> ஆம்; கோயிலில் புகுந்து குழப்பம் விளைவித்தேன்! கோயில் கூடாது என்பதற்காக அல்ல — கோயில் கொடியவர்களின் கூடாரம் ஆகிவிடக்கூடாதே என்பதற்காக!
>
> — கலைஞர்
>
> (பராசக்தி உரையாடலிலிருந்து)

ஒரு 'பாபா'வின் அந்தரங்க விவகாரங்கள்!

பழனி சித்தார்த்தன்

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை — ஆகியவற்றைத் துறந்தவர்கள் என வெளி உலகிற்குப் பறைசாற்றிவிட்டு — அந்தரங்கத்தில் அந்த மூவாசைகளின் மீது பேராசை பிடித்தலையும் எத்தனையோ 'பாபா'க்களைப் பற்றியும், 'யோகி'களைப் பற்றியும், 'மகரிஷி'களைப் பற்றியும் எத்தனையோ முறை படம் பிடித்துக்காட்டியாகிவிட்டது!

என்றபோதும் —

பண்டித ஜவகர்லால் நேரு சொன்னதுபோல், "கடவுளின் ஏஜண்டுகள் என்று தங்களைச் சொல்லிக்கொண்டு இந்தச் சாமியார்'கள் நெடுங்காலமாகவே இந்திய மக்களை ஏமாற்றிக்கொண்டு வருகிறார்கள்..." இன்னும் ஏமாற்றிக்கொண்டுதான் வருகிறார்கள்; பாமரமக்கள் அல்லாது — படித்தவர்கள்கூட அந்தப் போலி'களிடம் மயங்கிப்போய்த்தான் கிடக்கிறார்கள்.

இந்தியாவில் செய்தது போதாது என்று வெளிநாடுகளிலும் தனது எத்து வேலைகளைப் புரிந்துவரும், மகேஷ் யோகி என்பவன் அண்மையில் இங்கிலாந்து நாட்டில் நூறு அறைகள் கொண்ட ஒரு மாபெரும் மாளிகையை விலைக்கு வாங்கியிருக்கிறான். பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அந்தமாளிகையை வாங்க 'முற்றும் துறந்த முனிவனுக்கு' எங்கிருந்து பணம் வந்தது என்பது அந்தப் 'பகவானுக்கே' வெளிச்சம்...

'பாபா'க்கள் பட்டியலில் புதிதாக இடம் பெற்றிருக்கும் 'பால பிரம்மச்சாரி பரமஹம்சன்' என்ற ஒரு ஏமாற்றுக்காரனின் அந்தரங்கவிவகாரங்களைத் தெரிந்து கொண்ட பிறகு மடமையில் உழலும் பலரில், சிலராவது அதிலிருந்து மீளுவார்கள் என நம்பலாமா?

தயாநிதி திரிபாதி என்பவன் ஒரு ஓடுகாலி. தன்னுடைய ஒன்பதாவது வயதில் கிராமத்திலிருந்த வீட்டை விட்டு ஓட்டம் பிடித்து கல்கத்தா போய்ச் சேர்ந்தான் அவன் அங்கு ஒரு 'சாது'வின் பின்னால் சீடனாகச் சுற்றிக் கொண்டிருந்த அவன், பிறகு அவருடனேயே சேர்ந்து — இப்போது வங்காள தேசத்தைச் சார்ந்த — 'மைமென்சிங்' என்ற ஊருக்குப் போனான். டாக்காவில் ஏறத்தாழ பத்தாண்டுகள் அலைந்து திரிந்துகொண்டிருந்த அவனை — பாகிஸ்தான் — வங்காளதேசப் பிரிவினைப்போர் மீண்டும் இந்தியாவுக்கே விரட்டி அடித்தது.

இந்தியா வந்த அவன் கட்டாக்கிலிருக்கும்கோவிந்தப்பூர் என்றகிராமத்தில் காலூன்றிக் கொண்டான்; தயாநிதி திரிபாதி என்ற தன் பெயரை 'பால பிரம்மச்சாரி பரமஹம்சா' என மாற்றிக் கொண்டு 'தானொரு கடவுள் அவதாரம்' எனப் பிரகடனப்படுத்திக் கொண்டான்! ஊர் சுற்றிச் சாமியாரான அவனை கிராமத்து மக்களின் வழிபாடுகளும், மண்டியிட்ட கும்பிடுகளும் 'பாபா'வாக்கிவிட்டன

அந்த பாபாவும், 'கடவுள் அவதாரமுமான' பாலபிரம்மச்சாரிக்குப் பெண்கள் என்று சொன்னவுடனேயே நாக்கில் எச்சில் ஊறும்; அவன் நடத்தும் பூஜைகள் மிகவும் அலாதியானவைகள்; பூஜையின்போது அழகிய இளம்பெண்களால் சூழப்பட்ட அவன், பிறந்த மேனியாக வலம் வருவான்; அந்த இளம்பெண்கள் அவனுக்கு மலர் தூவி, மேனியில் மணக்கும் சந்தனத்தையும், வாசனைத் தைலங்களையும் பூசிவிடுவார்கள் பிறந்த மேனியில் — எல்லா உறுப்புக்களுக்கும்! 'பாபா'வுக்குச் செய்யும் இந்தப் பூசையைத்தான் அவனுடைய பக்தர்கள் லிங்க வழிபாடு எனப் போற்றுகிறார்கள்'

கடவுள் அவதாரம் என்று சொல்லிக்கொண்டு காமக்களியாட்டங்கள் நடத்தி வந்த அவனுடைய மோசடித்தனம்வெட்டவெளிச்சமாகவே கோவிந்தபுரம் கிராமத்து மக்கள் அவனை ஓட ஓட அடித்து விரட்டினார்கள்! அங்கிருந்து 'தப்பித்தோம்...பிழைத்தோம்' என உயிர்தப்பி ஓடிய அவன் 'திகிரியா' என்ற கிராமத்தை அடைந்தான்; அங்கிருந்து 'சருவா' கிராமத்திற்கு ஓடினான்; இவ்வாறு ஒரு தெருநாயைப்போல் அலைந்து திரிந்த அவன் மீண்டும் கட்டாக்கிற்கே வந்து, ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு மேல் அங்கேயே தங்கியும் விட்டான்!

படு அயோக்கியனான பால பிரம்மச்சாரி பரமஹம்சனின் ஆசிரமத்தின் மீது போலீசார் கண் வைத்தே இருந்தனர்; அவனுக்குக் கேடயமாக சில போலீஸ் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இருந்ததால் ஆரம்பத்தில் எதுவும் செய்ய முடியவில்லை. என்றபோதும், அவனுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்த போலீசார் அவனைக் கையும் களவுமாகப் பிடிக்கக் காத்திருந்தனர்.

செப்டம்பர் மாதம் இருபத்து நான்காம் தேதி இரவு. ஒரு போலீஸ் பட்டாளம் கட்டாக்கிலிருக்கும் 'பரம ஹம்சரின்' ஆசிரமத்தைச் சுற்றி வளைத்து, உள்ளேயும் ஊடுருவியது; ஆசிரமம் அந்தப் போலீஸ்காரர்களால் சோதனையிடப்பட்டபோது கிடைத்தவைகள்: பன்னிரண்டு துப்பாக்கிகள், நாற்பது ரிவால்வார்கள், இருபத்தைந்து கண்ணீர்ப்புகை குண்டுகள், ஐம்பதுக்கும் மேற்பட்ட கை வெடி குண்டுகள், டிரான்சிஸ்டர்கள் டேப் ரிக்கார்டர்கள் (ஜப்பான் தயாரிப்பு) விலை உயர்ந்த ரோலி பிளக்ஸ் புகைப்படக் கருவி, இவைகள் தவிர கார் ஜீப் எழு ரிக்ஷாக்களும் ஆசிரமத்தில் காணப்பட்டன;

ஆயுதத் தடுப்புச் சட்டத்தின் கீழும், அனுமதி இல்லாமல் அயல் நாட்டுப் பொருட்களை வைத்திருந்த குற்றத்தின் கீழும் 'பாபா பரமஹம்சரின் மீது வழக்குகள் தொடரப்பட்டன;

அயல் நாட்டுப் பொருட்கள் அனைத்தும் தன்னுடைய சீடர்களால் தனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவைகள் என 'பாபா' சொன்ன கதையைப்போலீசார் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

மேலும் —

கட்டாக்கில் பாபாவுக்கு ஒரு பங்களாவும் இருக்கிறது; இதை அவன் இராய் சௌதுரி என்பவரின் மனைவியிடமிருந்து 80,000 ரூபாய் விலைக்கு வாங்கினான்; ஆனால் அந்தப் பங்களாவின் மதிப்பு 24,000 ரூபாய் எனப் பொய்ப்பத்திரம் தயாரித்து வைத்திருந்தான்; இவ்வாறு பொய்க் கணக்குகாட்டி வருமான வரி இலாக்காவை ஏமாற்றிய குற்றத்திற்காகவும் அவன் மீது வழக்குத்தொடரப்பட்டது.

அவனுடைய ஆசிரமத்திற்கு சொந்தமான இடத்தின் பரப்பளவு ஐம்பது ஏக்கராக்கள்; இவ்வளவு பெரிய இடத்தை அவன் எப்படி, யார் மூலம் ஆக்கிரமித்துக் கொண்டான் என்பது மர்மமாகவே உள்ளது.

'பாபா' விடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கிக் குண்டுகள், பெல்ஜியம் — செக்கோஸ்லேவேகியா தயாரிப்புக்கள்; ரிவால்வார்கள் இத்தாலியத் தயாரிப்புகள்; துப்பாக்கிகள், கிரீஸ் தயாரிப்புகள்; ஏராளமான பணம் சம்பாதித்து வந்த — நிச்சயமாக நேர்மையான வழிகளில் அல்ல — 'பாபா' ஒரு காசுகூட வருமான வரியாகச் செலுத்தியதில்லை,

போலீஸ் பட்டாளம் 'பாபா'வின் ஆசிரமத்திற்குள் நுழைய எத்தனித்தபோது; அவனால் இறைச்சி போட்டு வளர்க்கப்பட்ட ஆளுயிரக் கொழுத்த நாய்கள் கூரிய பற்களைக் காட்டித் தடுக்கப் பார்த்தன; அவைகளின் வெறித்தனமான பாய்ச்சலையும், இரத்தத்தை உறைய வைக்கும் குறைப்பையும் முறியடித்து போலீஸ் பட்டாளம் ஆசிரமத்திற்குள் நுழைந்தபோது, 'பாபா' அனந்த சயனத்தில் இருந்தான்; அவனுடைய தலையணைத்கடியில் ஒரு ரிவால்வர் இருந்தது; படுக்கைக்கு மேல் ஒரு துப்பாக்கி தொங்கிக்கொண்டிருந்தது, இரண்டிலுமே குண்டுகள் கெட்டிக்கப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்ட 'பாபா' பொறுப்பில் விடுதலையாகி வெளியே இப்போது சுற்றிக் கொண்டுதான் இருக்கிறான்.

போலீசார் பல கேள்விகளுக்கு இன்னும் விடை தேடிக்கொண்டிருக்கிறார்கள்;

சாதாரண திரிபாதி; பாபா ஆன பிறகு குறுகியநாட்களில் ஏராளமான சொத்துக்களுக்கு அதிபதி ஆனது எப்படி?

உயிர் போக்கும் அந்நிய நாட்டு ஆயுதங்களை 'பாபா' கடத்தி வந்து ஆசிரமத்தினுள் குவிப்பதன் நோக்கம் என்ன?

துப்பாக்கிக் குண்டுகளுக்கும் — ஓநாய் போன்ற நாய்களுக்கும் மத்தியில் 'சுவர்' எழுப்பிக் கொண்டு அவன் வாழ்ந்துகொண்டிருப்பதன் மர்மம் என்ன?

அவனைப் பின்னின்று ஊக்குவிக்கும் சக்திகள் எவை?

— இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் கிடைக்கும் நாளில் இன்னும் பல இரகசியங்கள் வெளிச்சத்திற்கு வரக்கூடும்!

Tel : JEKAyKAy : Phone : 679 (Bhavani)

J.K.K. TEXTILE PROCESSING MILLS

POST BOX No. 55

KOMARAPALAYAM- 638 183

(via) ERODE

J.K.K J.K.K

With pleasure we have started our new Textile processing Mills. near New Cauvery Bridge, Komarapalaym. We are doing cloth bleaching. dyeing and fihshing works with most modern sophisticated machineries and well trained personnel. to the entire satisfaction of the customers.

We proudly announce that we are reputed processors In international market and 90% of our capacity is ed in Export variety.

★ மதுவிலே நஞ்சைக் கலந்து 800 பேர் படுகொலை!

★ மதவெறியரின் கொலை வெறிக் கூத்து!

★ மக்கள் ஆலயம் என்ற பெயரில் இயங்கும் மர்ம ஆலயம்!

★ 'நர பலி' வாங்கும் 'புனித தேவதை'யின் இரகசியத் திட்டம்!

★ அமெரிக்காவில் நடந்த அநாகரீக வெறியாட்டம்!

உலகை குலுக்கிய ஒரு காட்டுமிராண்டி நிகழ்ச்சி!

★ ஜாகீர் ★

தென் அமெரிக்காவைச் சேர்ந்த குயானாவில் இருக்கும் 'ஜோன்ஸ் டவுனில்' ஜிம் ஜோன்ஸ் என்பவர் ஒரு இயக்கம் நடத்தி வந்தார். அதன் பெயர்: 'மக்கள் ஆலயம்!'

ஜிம்ஜோன்ஸ் ஒரு வெள்ளையர் என்றபோதும், அவரது சமய இயக்கத்தின் தொண்டர்களில் பலர் கறுப்பர்கள். இயக்கம், அகிம்சை வழியில் செல்லும் ஒரு சீர்திருத்தஇயக்கம் என்று ஜிம்ஜோன்ஸ்வெளி உலகில் பறைசாற்றி வந்தார். அவருக்கு அரசியல் தலைவர்கள் பலரின் ஆதரவு நிறைய இருந்தது.

குயானா பகுதியிலுள்ள காடொன்றில் ''மக்கள் ஆலயம்'' சமயப் பிரிவினர் முகாமிட்டிருப்பதாகவும், தங்கள் விருப்பத்திற்கு மாறாக ஏராளமான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் — ஜிம்ஜோன்சினல் 'சிறை' வைக்கப்பட்டிருப்பதாகவும் அமெரிக்க அரசாங்கத்திற்குத் தகவல்கள் கிடைத்தன.

உண்மையில் அங்கு என்னதான் நடந்து வருகிறது என்பதைக் கண்டறிய அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினரான லியோ ரயான், பத்திரிகையாளரான டான் ஹாரிஸ், புகைப்படக் கலைஞரான இராபர்ட் ப்ரௌன் ஆகியோர் காட்டில் நடந்த 'மக்கள் ஆலயம்' சமயப் பிரிவினரின் முகாமுக்குச் சென்றபோது, அவர்கள் ஜிம்ஜோன்சின் ஆட்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

எப்படியோ உயிர்பிழைத்து ஓடிவந்த இரண்டு பத்திரிகையாளர்கள், சரமாரியாகத் தங்களை நோக்கித் துப்பாக்கி குண்டுகள் பொழியப்பட்டன என்றார்கள்.

அரசாங்கத் துருப்புகளும் போலீசாரும் முகாமைச் சோதனையிட்டபோது கண்ட காட்சி -

எண்ணூறுக்கும் மேற்பட்டோரின் சடலங்கள் அங்கே சிதறிக் கிடந்தன—

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரின்சடலம் நீலம் பாரித்து உடைந்த பொம்மைகளென காணுமிடமெல்லாம் சிதறிக் கிடந்தன.

அத்தனைபேரும் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டவர்கள்.

அதாவது—

'தற்கொலை' செய்து கொள்ள ஜிம்ஜோன்சினல் பலாத்காரமாகப் பயிற்சி கொடுக்கப்பட்டவர்கள்.

அமெரிக்கா முழுவதையும் இக்கொடுஞ்சம்பவம் ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது'

சமயப்போர்வை தரித்த வன்முறையாளர்களின் இதயமற்ற, காட்டுமிராண்டித்தனமான, நாகரிக உலகம் இதுவரை கேட்டறியாத இந்த செயல்கண்டு உலகமேவேதனையும், வியப்பும்அடைந்துள்ளது

எதிர்பாராத —உணர்ச்சிக் கொந்தளிப்பில் நடந்த மரணங்கள் அல்ல அவைகள்! ''மக்கள் ஆலய''த்தின் இரகசிய உறுப்பினரும், 'தற்கொலைத் திட்டத்திலிருந்து' தப்பித்து வந்தவருமான வண்டாஜாக்சன் ''1973-ஆம் ஆண்டிலிருந்தே இந்தத் தற்கொலைத் திட்டத்தை ஜிம் ஜோன்சிஸ் செயலாக்கவிரும்பி வந்தார்...'' என்று கூறுகிறார்.

'தற்கொலைத் திட்டம்' செயல்படுத்தப்பட்ட அன்றிரவு—

ஜிம்ஜோன்ஸ், எல்லோரும் சேர்ந்து மது அருந்தி மகிழலாம் என்றார். அவ்வாறே முகாமிலிருந்தவர்கள் 'மது' அருந்திய பிறகுஜிம்ஜோன்ஸ் அமைதியாகச் சொன்னார்:

''நீங்கள் அருந்தியது மது அல்ல ... நஞ்சு! இவ்வுலகில் நீங்கள் உயிர்வாழப்போவது இன்னும் முப்பது நிமிடங்களே...''

சாக விரும்பாதவர்கள் 'புனித தேவதைகள்' என்று அழைக்கப்பட்ட ஜிம்ஜோன்ஸின் ஆட்களால் அடித்துக் கொல்லப்பட்டார்கள்; சுட்டுப் பொசுக்கப்பட்டார்கள்!

இக்கொடுஞ் சம்பவத்தை நேரில் கண்ட 'ஒடல்ரோட்ஸ்' என்ற ஆசிரியார் கூறியது:

'ஜிம்ஜோன்சின் கட்டளைப்படி மக்கள் ஆலய' உறுப்பினர்கள் அனைவரும் நீண்ட மேஜையின் முன் வரிசையாக நின்றார்கள்; ஒரு நர்ஸ், அவர்களின் வாயினுள் நஞ்சைப் பீச்சினாள்...முதலில் உயிர்விட்டவர்ஒரு இளம் பெண் ... பச்சிளங் குழந்தையை மார்பில் அணைத்தவாறே அவள் மாண்டாள்...'

மரணத்தின் நிழல் தங்கள் மீது படிந்துவிட்டதை உணர்ந்த அந்தச் 'சமய உறுப்பினர்கள்' அழுதார்கள்; கதறினார்கள்; புரண்டார்கள்; ''நாங்கள் சாகவிரும்பவில்லை...நாங்கள் சாகவிரும்பவில்லை...'' என்று கூக்குரல் எழுப்பினார்கள்.

ஆனல்—

காலம் கடந்துவிட்டது!

உயிரோடு இருந்தவர்கள் உயிரற்ற சடலங்களாகத் தரையில் விழுந்துகொண்டே இருந்தார்கள்...

ஜோன்சின் முகாமில் நடப்பதைக் கண்டறியச் சென்று - சுட்டுக் கொல்லப்பட்ட ஹாரிசின் முன் அந்த இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் மறைமுகமாக ஒரு சிலேட்டில் ''இங்கிருந்து நான் தப்பித்துச் செல்ல தயவு செய்து உதவி செய்யுங்கள்!'' என்று எழுதிக் காட்டினார்

'மக்கள் ஆலயம்' நடத்திவ ஜிம்ஜோன்சின் ஈவிரக்கமற்ற செயல்கள் இப்போது ஒவ்வொன்றாக வெளி உலகிற்குத் தெரிந்து வருகின்றன:

சில மாதங்களுக்கு முன் - அந்த முகாமிலிருந்து தப்பித்துச் சென்ற ஒருவரை ஜிம் ஜோன்சின் ஆட்கள் பிடித்து வந்து அடித்தே கொன்றுவிட்டார்கள். ஒரு குழந்தையானாலும் - விதிகளை மீறிவிட்டால் தண்ணீரில் தலையை'அமிழ்த்தி அமிழ்த்தி' எடுப்பது ஜிம் ஜோன்ஸ் வழங்கும் தண்டனைகளில் ஒன்று,

''பாதர் ... பாதர் ... (தந்தையே...தந்தையே...)மன்னியுங்கள் ... மன்னியுங்கள்...'' என்று குழந்தை கெஞ்சினலும் ஜிம்ஜோன்சின் ஆட்கள் மன்னிக்கமாட்டார்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டசடலங்களில்ஜிம்ஜோன்ஸ் அவருடைய மனைவி ஆகியோரின் சடலங்களும் இருந்தன. இன்னும் கண்டுபிடிக்கப்படாத சடலங்கள் எத்தனையோ...

—சடலங்களை அப்புறப் படுத்துவதே இப்போது அரசாங்கத் துருப்புகளுக்குபெரிய பிரச்சினையாகிவிட்டது.

●



(8—ம் பக்கத் தொடர்ச்சி)

வுடன் இந்த ஆசிரமத்தை நோக்கி மேல் நாட்டுக்காரர்கள் ஓடி வருகிறார்கள்.

இவைகளைச்சொல்லிவிட்டு.ரஜினீஷ்மேலும் சொல்கிறார். ''இந்திரா காந்தி என்னுடைய சிந்தனைகளை எப்போதும் விரும்புவார். என்னுடைய சிந்திக்கும் முறையின் மீது இந்திராவுகது எப்போதுமே ஒரு அலாதி அன்பு உண்டு.'' ரஜினீஷின் இந்தக் கருத்துக்கள் இந்திராவுக்கு பிடித்து இருப்பதில் ஆச்சரியமில்லை! அதற்கான காரணங்களைத் தேட வேண்டியதில்லை. எம். ஓ. மத்தாய் தனது ''நேரு கால நினைவலைகள்'' நூலில் ஒரு ஆண் — ஒரு பெண் என்ற அடிப்படையில் வாழ்ந்த நேரு குடும்பத்து மனிதர் ஒருவரை இன்னும் நான் பார்த்ததல்லை என்று சொல்லவில்லையா?

ரஜினீஷ் இன்றைக்கு ஜனதா அரசையும் மொரார்ஜிதேசாயையும் அன்றாடம் அர்சித்துக் கொண்டிருக்க முடிகிறதென்றால், அது ஜனதா அரசு மீட்டுத் தந்த பேச்சுச்சுதந்திரத்தால்தான் என்பதை அவர் தெரிந்து கொள்ளவேண்டும்.

இப்போது இந்திராவின் அரசாங்கம் இருந்திருக்குமானல், இப்படிப்பட்ட பேச்சுக்களுக்கு ரஜினீஷ் சிறைக் கம்பிகளை எண்ண வேண்டியிருந்திருக்கும். அவருடைய ஆசிரமம் ஒழிக்கப்பட்டிருக்கும். அவரது வெளிநாட்டுச் சீடர்களுக்கு இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதே தெரிந்திருக்காது.

பி. பி. சி. டெலிவிஷன் நிலையத்தார். இந்த ஆசிரமத்தில் நடப்பதை படம் பிடிக்க ஜனதா அரசு அனுமதி மறுத்தது தவறுதான்! அதற்குப் பதிலாக விபச்சாரத் தடைச் சட்டத்தின்கீழ், முறைகேடான நடத்தைகளின்கீழ் இந்த ஆசிரமத்தில் நடக்கும விவகாரங்களைத் தடுத்திருக்க வேண்டும் கஜுராஹோ காலத்திலோ, கொனராக் காலத்திலோ இருந்தது என்பதற்காக, தனது ஆசிரமத்தில் காம விளையாட்டுகளை நடத்த ரஜினீஷுக்கு உரிமை கிடையாது. இதற்கு அனுமதித்தால், நர பலியும், உடன்கட்டை ஏறுதலும் இந்து சாஸ்திரத்தில் இருந்தருக்கிறது என்று வேறு ஒரு சாமியார் அதைப்பிரச்சாரம் செய்ய புறப்பட்டு விடக்கூடும்!

—''காரவன்'' இதழ் தலையங்கம்

ஒரு மாலைப் பத்திரிகையின் 'செக்ஸ்' அரசியல்!

வாழ்வதற்கு 'வழி' ஒன்று இல்லாதபோது — எப்படி யாவது வாழ்ந்தாக வேண்டு மென்று ஒரு முடிவுக்கு வந்த பின்பு — வாழ்வது என்பது மிகவும் சுலபமான காரியம்! இதற்குவேறுஉதாரணத்தைத் தேடி அலைய வேண்டாம்! டெல்லியிலிருந்து வெளிவருகிறது 'சூரியா' என்ற வாரப் பத்திரிகை இதன் ஆசிரியர் மேனகா காந்தி! அதாவது சஞ்சய் காந்தியின் மனைவி 'செக்ஸ்' அரசியல் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் மிகவும் 'தரமான பத்திரிகை' அது!

மேனகா ஒரு 'மாடல்'— அதாவதுஓவியக்கலைஞர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் 'போஸ்' கொடுக்கும்'மாடல' அழகி! இவருக்கும் சஞ்சய் காந்திக்கும் ஏற்பட்ட சந்திப்பே – செக்ஸ்' அரசியலின் விளைவுதான் சந்திப்புக்குக் காதல் என்று பெயர் சூட்டப் பட்டு பின்பு – அது திருமண மாக மலர்ந்தது நட்சத்திர ஓட்டல்களில் நடக்கும் சந்திப்புகள் — சல்லாபங்கள் பற்றி — மேனகா அறியாத கதைகள் கிடையாது. அந்த அறிவையும், அனுபவத்தையும் மூலதனமாக வைத்து நடத்தும் பத்திரிகைதான் 'சூரியா!'

'சூரியா'வில் ஜகஜீவன் ராம் மகன். சுரேஷ் குமாரின் 'செக்ஸ்' அரசியல் விளக்கங்கள். பச்சையான புகைப் படங்கள் வந்த வண்ணமிருக் கின்றன!

தமிழ் நாட்டில் நடக்கும் மாலைப் பததிரிகை ஒன்று மக்களுக்காகக் குரல் கொடுப்பவராம்இந்தப்பத்திரிகையின் ஆசிரியர்! உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்று தன்னைச் சொல்லிக் கொள்ளும் பிழைக்கும் பத்திரிகையாளர் இவரைத் தவிர மற்றவர்கள் உறங்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பது இவரது கணிப்பு!

இந்திராகாந்தியின் இரகசியக்கூலிப்படை (R.A.W) பில் இவர் நெருக்கடி நிலைக் காலத்தில் ஒரு ஏஜெண்ட்! அந்தக் காலத்திலேயே இவர் வெளியிட்ட செய்திகள் ஒரு செக்ஸ் அரசியல்தான்!

இறந்துபோன நடிகைகளின் படங்களைப் போடுவார். அதற்குப் பின் உள்ள மர்மம் என்ன என்ற கேள்வியை எழுப்புவார்! அவருக்கும் — இவருக்கும் தொடர்பு என்று கதைகள் புனைவார்; எப்படியோ இவர் பிழைப்பு நடந்துவந்தது!

இப்போது இவருக்கு ஒரே வழிகாட்டி சூரியா பத்திரிகை தான்!

'சூரியா பத்திரிகையில் வரும் செய்திகளைத் தன் மாலை பத்திரிகையில் சுடச் சுடத் தருவார்! அதுவும் தி. மு, க. ஜனதா என்றால் இவருக்கு செக்ஸ் அரசியல் எழுதுவதில் ஒரு அலாதிப் பிரியம்!

இவருடைய பத்திரிகை படுத்துவிட்டதாக ஒருசெய்தி 'சூரியா' பத்திரிகையை மூல தனமாக வைத்துச் செய்திகள் போட்டார்! வளரவில்லை; சிக்மகளூர் 'செக்ஸ்' தேர்தல் பற்றி எழுதிப் பார்த்தார்! பின்பு சிக்னல் கொடுத்துப் பார்த்தார்! படுத்தது எழுந்

டி. பி. ஆர்.

திருப்பதாகத் தெரியவில்லை! ஒருவரும் தீண்டவில்லை.

இப்போது டெல்லிப் பட்டணம் போய் அங்கிருந்து செய்திகளைத் தருகிறார்! மேனகாவின் 'சிஷ்யர்' இவர்! சொந்த நாட்டில் பிழைக்கப் பல வழிகள் இவருக்கு உண்டு!

'செக்ஸ' அரசியலில் எம். ஜி. ஆருக்கு நிகர் யாருண்டு? அவரைக் கதாநாயகனாக வைத்து அரசியல் நடத்தும் இந்தப் பத்திரிகைச் செய்திகளைத் தேடிப் போக வேண்டிய இடங்கள் சென்னை நகரத்திலேயே இருக்கின்றன! இவர் தன்னுடைய மாலைப் பத்திரிகையைக் கைவிட்டு' 'சூரியா' பத்திரிகையின் நிருபராக சென்னையில் பணி புரிந்தால், எம். ஜி ஆரின் செக்ஸ்' அரசியல் நாட்டின் மற்றப் பகுதிகளுக்கும் தெரியும் வாய்ப்பு உண்டு! விரைவில் அந்த நிருபர் பொறுப்பையும் ஏற்கப் போவதாக வதந்தி வாயு வேகத்தில் பரவிக் கொண்டிருக்கிறது.

★

நெருக்கடிகால கெடுபிடிகள்..

[3-ம் பக்கத் தொடர்ச்சி[

வீசிக்கொண்டிருந்தது, நாங்களேஒருவருக் கொருவர் கை கோர்த்தப்படி பாதுக்காப் பெல்லை எற்படுத்திக்கொண்டு திடமாக நின்றிருந்தோம். இம் முறையும் திருமதி காந்தி வந்து, முன் நிகழ்ச்சியைவிட அதிகக்கலவரமடைந்துகாணப் பட்டார். அவரால் பேசமுடியவில்லை. ஒலிபெருக்கி இயங்கவில்லை, பின்னர் இயங்க ஆரம்பித்தவுடன் மழை பெய்ய ஆரம்பித்தது. கூடியிருந்த கூட்டம் கலைய ஆரம்பித்தது.

நான் எங்கு சென்றாலும். எனது எதிர்ப்புகளை முறியடிக்க இந்திரா நினைத்தாரே தவிர எனது வினாக்களுக்கு விடையளிக்க முன்வரவில்லை. கடைசி நாள் பத்திரிகையாளர் கூட்டம் நடக்கும்வரையிலும் கூட பதிலளிக்கவில்லை. முறியடிப்பு வழிகள் யாவும் பலாத்காரமானவைகளாகவும் பயங்கரமானவைகளா கவும் இருந்தன. இவை யாவும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருந்தன.

31 ஆம் தேதியன்று, இந்திரா பேச இருந்த ஒரு கூட்டத்தில் மற்ற பன்னிரண்டு பெண்களோடு ஒன்பது மணிக்குச் சென்று காத்திருந்தேன், நான்கு மணிக்கு வருவதாக இருந்த அவர் ஐந்து மணி வரையிலும் வரவில்லை ஒரு காவற்துறைஆய்வாளர் வந்து திருமதிகாந்தி வரவில்லை, அவரது தொண்டர்கள் மட்டும் வந்துள்ளனர்என்று என்னிடம் கூறினார். அவர்கள் யாவரும் குண்டர்கள் எனக் கூறினேன். அவரும் ஒப்புக் கொண்டு, அவர்கள் சட்டம் - ஒழுங்குக்கு தீமை விளைவிக்கலாம் எனக் கூறி, என்னைக்கைதுசெய்தார்.



நந்தனுவை, காவற்துறை பெண் ஒருவர் அப்புறப்படுத்த இழுக்கையில் இந்திராவின் ஆதரவாளர்கள் அவரைக் கைது செய்யும்படி கட்டாயப் படுத்துவதை படத்தில் காணலாம்.

கைதாவோம் என்று தெரிந்தே அத்தெருவில் இப்படியும் அப்படியும் துணிந்து நடக்கலானேன். என் பின் இரண்டு, காவற்துறை அதிகாரிகள் வந்தனர். எதிர்த்து நின்றேன் பிடிகொடாது நெளிந்தேன், விளக்க அட்டையைக் கைப்பற்றினார்கள். திரும்பப் பெற்றேன். எக் குற்றத்திற்காக. எச்சட்டம் அடிப்படையின் கீழ் என்னைக் கைது செய்கிறீர்கள்? என வினாக்களை வீசினேன் சரியான விடையளிக்க முடியாது. எதோ ஒரு முரண்பட்ட சட்டத்தை சொன்னார்கள்,

(தொடரும்)

★

தமிழகத்தில் புயல்வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு

தி. மு. கழக அறக்கட்டளை ரூ 5 ஆயிரம் உதவி

தமிழகத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்கட்கு நிவாரணமளிக்க தி மு. கழக அறக்கட்டளை சார்பில் தலைவர் கலைஞர் 5 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை அனுப்பிவைத்தார்கள். அது தமிழக நிதிஅமைச்சரிடம் அளிக்கப்பட்டது.

புனித ராஜ்யம்

(முதற் பக்கத் தொடர்ச்சி)

ளிர் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தனர்! இன்று கிறித்துவ ஆலயங்களில் காணுகிறோமே; அதைப் போன்ற புனித வழி பாட்டுக்காக அக்காலத்தில் பெண்கள் தேவாலயத் திருப்பணிகளில் ஈடு பட்டனர். ஆனால் அந்தக் கலை மாதர்களை விலை மாதர்களாக்கிய கொடுமை நீங்கள் படிக்கிறீர்களே; இந்தப்புராண இதிகாசங்களால் தான் தமிழ் நாட்டில் நுழைந்து கொண்டது.

பாலம்மா: வரலாறு – கதை புராணம் — அதெல்லாம் எதுக்கு? உலகத்திலே மனுஷாளா பொறக்கிறோம்! அவுங்க அவுங்களும் உயிர்வாழ விரும்புறோம். ஆண்டவன் நீ இன்ன வேலை செய்து தான் பிழைக்க வேண்டும்னு பிறக்கும்போதே தலையில எழுதி அனுப்புறான்.

சுந்தரி: அதுக்காக - மானத்தைஇழந்துஉடலை விற்றுப்பிழைத்துக்கொள் என்று எந்தக் கடவுளாவது கட்டளையிட்டிருப் பானேயானால் அந்தக் கடவுளுக்குக் கல்லறை கட்டிவிட்டுத்தான் மறு வேலை பார்க்க வேண்டும்

பாலம்மா: சும்மா கிட சுந்தரி! மானமாவது மரியாதையாவது! காசுக்கும் பதவிக்கும், கௌரவத்துக்கும் ஆசைப்பட்டு; யார் அதிகாரத்திலே இருக்காங்களோ அவுங்க காலிலே போயி விழுந்து போற்றி போற்றி! புண்ணியனே போற்றி! அப்படின்னு புலம்பித் தவிக்கிற அரசியல்வாதிகள் பண்றவிபச்சாரத்தை விட நான் நடத்துறவிபச்சாரம் ஒண்ணும் கெட்டுப் போய்விடவில்லை!

சுந்தரி: அத்தை! உங்களைத் திருத்தவே முடியாது - என்னமோ எலிப் பொறியிலே கிளிவந்து மாட்டின மாதிரி நான் வந்து சிக்கிகிட்டேன். நல்ல வேளை; தப்பிச்சேன்! நான் வர்றேன்.

(கும்பிட்டு விட்டுப் புறப்படுகிறாள்)

[அப்போது - அண்ணாச்சி, நொண்டி, போலீசார் உள்ளே நுழைகிறார்கள். சுந்தரி, திடுக்கிட்டு நிற்கிறாள்]

]காட்சி முடியவில்லை

தொடரும்]

பிரதிநிதி;

கே எம். ஜி. மாதவன்.
11, புதுத்தெரு, மைலாப்பூர்
சென்னை-4

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு

தி. மு. க. வழங்கிய துயர் துடைப்பு நிதி

இலங்கையில் புயல் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணமளிக்க தி. மு. கழகச் சார்பில் 10 ஆயிரம் ரூபாய் நிதி முறைப்படி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகள் பலவற்றில் வாழும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் தங்களால் இயன்ற உதவியை, அதற்குரிய விதிமுறைகளின்படி இலங்கை மக்களின் நிவாரணத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மு கருணாநிதி,
(தலைவர் தி. மு. கழகம்)

டவுனிங் தெருவுக்குச் செல்ல வேண்டியவர்

ஹேரட்ஸ் வீதிக்குப் போகலாமா?

சா. கணேசன்

கடந்த ஆறுமாத காலமாக அடிக்கடி பத்திரிகையில் அவசரமாக அடிபட்ட செய்திகளில் ஒன்று தமிழக முதல்வர் மேலை நாடுகளுக்குச் செல்கிறார் என்பது.

ஏன் இந்தப் பயணம் இப்படி ஒத்தி போடப்பட்டே வந்தது என்பது எவருக்கும் புரியாத புதிராகவே இருந்து வந்தது. இவர் பயணம் மேற்கொள்ளும் நாடுகளிலிருந்து முறையான அழைப்பிதழ் முயன்றும் வரவில்லைபோலும்!

தமிழ்நாட்டில்முதலமைச்சர் எம் ஜி.ஆர். செய்யவேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கும் போல் தெரிகிறது என்றும் சிலர் யூகித்தனர். அப்படி என்றால் கோட்டையில் ஏன் ஆயிரக் கணக்கான கோப்புகள் பார்க்காமலும்; பரிசீலிக்கப் படாமலும் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன என்பது பற்றியும் சிலர் எண்ணிப் பார்க்காமலில்லை.

ஒரு நடிகர் நாடாளத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரே—அவர் திறமை என்ன? செய்த தியாகம் என்ன? அவருடைய ராஜ தந்திரம் எப்படிப் பளிச்சிடுகின்றது என்பதைப்பற்றி யெல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமென்று சில நாடுகள் அழைப்பிதழ் அனுப்பியிருக்கலாம் என்று ஆருடம் கணித்தனர் செய்தியாளர்கள்.

அமெரிக்காவும், இங்கிலாந்தும், மேற்கு ஜெர்மனியும் தங்கள் நாட்டிற்கு வருகை தர வேண்டுமென்று தமிழக முதல்வருக்கு அழைப்பு விடுத்தன. அழைப்பிதழ் பெற்ற முதலமைச்சர் அடுத்தகணமே நன்றிகூறிப்பதில் எழுதியிருக்க வேண்டும். அழைப்பை ஏற்று அந்நாடுகளுக்குச் செல்வதும், செல்லாது இருப்பதும் நாட்டின் பணியைப் பொறுத்து நடந்து கொள்ள வேண்டிய நிலையாகும்.

புதிய படங்களுக்கு ஸ்டுடியோவில் பூஜை போடும் விழாக்களுக்கு விஜயம் செய்யும் முதலமைச்சருக்கு பதில் எழுதச் சொல்லி அதிகாரிகளுக்குக் கட்டளையிட அவகாசம் கிடைக்கவில்லை போலும்!

அலட்சியப் படுத்தப்பட்ட இங்கிலாந்தும், மேற்கு ஜெர்மனியும் பதிலடி கொடுப்பது போல அனுப்பிய அழைப்பிதழைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டன. அமெரிக்க நாட்டைப் பொறுத்தவரை அனுப்பிய அழைப்பிதழ் அப்படியே இருப்பதாகக் கருதப் படுகிறது.

எப்படியோ முதல்வர் இராமச்சந்திரன் மேலை நாடுகளுக்குப் புறப்பட்டுவிட்டார். புறப்படும்போது பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தார். தமிழ்நாட்டின் தொழில் வளத்திற்காகவும், காவல் துறை ஆய்வு நடத்துவதற்காகவும் பயணம் செய்வதாக நிருபர்களுக்குத் பதில் அளித்தார்; பம்பாய் மூலமாக இலண்டன் நகரைப் போய்ச் சேர்ந்தார். முதலமைச்சர் என்ற பொறுப்பின்பேரிலோ, அரசாங்கத்தின் அழைப்பிதழின் பேரிலோ அல்ல' சாதாரண ஒரு சுற்றுப் பயணியாக மாஜி நடிகராக அவர் சென்றார்.

அவர் இலண்டனில் தங்கியிருந்தபோது ஆட்சியிலே உள்ளவர்களையோ அரசாங்க அதிகாரிகளையோ சந்தித்துத் தொழில் திட்டம் குறித்துப் பேசியதாக இதுவரை தகவல் இல்லை. இலண்டனில் செய்தியாளர்களைக் கூட்டி வைத்து அவர் தன்னோடு கொண்டு போயிருந்த தமிழக அரசு தயாரித்த—தன்னைப் பற்றிய கையோடு ஒன்றினை வழங்கியிருக்கிறார். பன்னிரண்டு பக்கங்கள் அடங்கிய அச் சிறு நூலில் புகைப் படங்கள் பத்து உள்ளனவாம். "மக்கள் திலகம்" என்றும் "புரட்சித் தலைவர்" என்றும் "அதிசயப் பிறவி" என்றும்; 150 படங்களுக்கு மேல் நடித்துள்ளவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

புத்தகத்தைப் புரட்டிப் பார்த்த நிருபர்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகி விட்டனர். அரசியல் கட்சியின் தலைவராயிற்றே. எதிர்க் கட்சியாக இருந்து செயல்பட்டபோது எத்தனை போராட்டங்கள் நடத்தியிருப்பார்; எத்தனை ஆயிரம் தொண்டர்கள் சிறைகளை நிரப்பியிருப்பார்கள்! புரட்சித் தலைவர் என்கிறார்களே; சிறையினை எத்தனை முறை சந்தித்திருப்பார்? உலக அரசியல் தலைவர்களில் பலர் புதிய வரலாற்றையே படைத்திருக்கிறார்களே; இந்தப் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர், எப்படிப்பட்ட புரட்சியைப் பண்ணியிருப்பார் என்று நினைப்பது இயல்புதானே!

இவர் பதினெட்டு மாதங்களாக ஆட்சி நடத்தி வருகிறாரே. மக்கள் பெற்ற பயன் என்ன? தீட்டிய திட்டமென்ன? நிறைவேற்றிய அளவு என்ன? விவசாயிகண்ட வளம் என்ன? தொழிலாளியின் துயர் துடைக்கப்பட்டதா? அச்சிறு நூலில் இந்தத் தகவல் எல்லாம் இடம்பெறவில்லை. பாவம்! எதிர்பார்த்து வந்தநிருபர்கள் ஏமாந்துபோயினர்,

இங்கிலாந்து நாட்டில் இருந்து வந்த செய்தியெல்லாம். மரபுக்கு மாறாக நமது உள்நாட்டு அரசியலைப்பற்றி விமர்சனம் செய்தது தான் ஏற்கனவே ஒப்புக்கொண்ட பேட்டியைப் புறக்கணித்ததாகவேறு, செய்தி வந்திருக்கிறது.

வங்காளத்திலிருந்து வெளிவரும்'அமிர்தபஜார்பத்திரிகா'வின் நிருபர்அஜீத்ராய்குறித்த நேரப்படி சவேரா ஓட்டலில் வந்து காத்திருந்து ஏமாற்றத்திற்கு ஆளாகியிருக்கிறார். நிருபர் வெள்ளைக்காரராக இருப்பார் என்று எதிர்பார்த்து, பேட்டிக்கு நேரம்ஒதுக்கியதாகவும், ஆனால் நிருபர் இந்தியர் என்பதால் பேட்டி மறுக்கப்பட்டதாகவும் தகவல் வெளிவந்திருக்கிறது. இந்தச் சம்பவம் இலண்டன் நகரில் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது.

ஏற்கனவே இந்த மனிதர் திரைப்படம் எடுப்பதற்காக வெளிநாடு சென்ற நேரத்தில் இந்திய அரசு ஒதுக்கிய அந்நியச் செலாவணியை விட இலட்சக்கணக்கில் டாலராகவும், பவுனாகவும் விரயம் செய்திருக்கிறார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்ததை நாடு இதற்குள்ளாக மறந்துவிடவில்லை. ஆனால் அரசியல் காரணங்களுக்காக அது அப்படியே மூடிமறைக்கப்பட்டு விட்டது.

திரைப்பட நடிகராக அவர் வெளிநாடு சென்ற நேரத்தில் அவரது அந்நியச் செலாவணி மீறுகையால், அவர் ஒரு தனி மனிதர் என்பதால் நாடு பாதிக்கப்படவில்லை.

இன்றைய நிலை அதுஅல்ல. எம். ஜி. இராமச்சந்திரன் இன்று தமிழகத்தின் முதலமைச்சர். அரசு மரியாதை இல்லாது இலண்டன் மாநகரிலுள்ளஹேரட்ஸ்கடைவீதியில் மாஜி நடிகர் என்ற நிலையில் சுற்றித்திரிந்திருக்கிறார். இலண்டன் மாநகரில் அங்காடிவீதிகள் பல இருந்தாலும் ஆடம்பரப் பொருள்கள் அதிக விலையில் விற்கப்படும் அங்காடி. ஹேரட்ஸ் வீதியிலேதான் உள்ளன!

இந்திய நாட்டுக்குடிமகன் ஒருவர் சராசரி மாத வருமானத்தை எடுத்துக்கொண்டு போனால் அங்கு ஒரு சோப்புக் கட்டியைக்கூட வாங்க முடியாதாம்.

இங்கிலாந்து நாட்டின் அரசி எலிசபெத்தும், அரேபிய நாட்டு எண்ணெய்க் கிணறுகளின் சொந்தக்காரர்களும்தான் ஹேரட்ஸ் கடைவீதியில் விற்கும் பொருள்களை வாங்குவதற்கு மொய்த்துக் கொண்டிருப்பார்களாம். அப்படி அங்கே உள்ள கடைகளில் விற்கப்படும் பொருள்கள் யானை விலையும், குதிரை விலையுமாக இருக்கின்றனவாம்.

அரைப்பட்டினியும் கால் பட்டினியுமாகக் கிடக்கின்ற தமிழ்நாட்டுக் கடைநிலை மக்களின் ஏகப்பிரதிநிதியாகிய முதலமைச்சர் எம்.ஜி இராமச்சந்திரன் ஹேரட்ஸ் கடைவீதியில் ஆயிரக்கணக்கானடாலர் கொடுத்துப் பொருள்களை வாங்கியதாகவும் அதை அதிகாரிதூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு தங்கியிருந்த ஓட்டலுக்கு வந்து சேர்ந்தார் என்றும் தகவல் வெளிவந்திருக்கிறது. இவருக்கு இந்திய அரசு அனுமதித்திருக்கும் அந்நியச் செலாவணியைக் கொண்டு ஹேரட்ஸ் கடைவீதியில் பொருள்களை வாங்கமுடியுமா என்பது சந்தேகமே.

நடிகராக இராமச்சந்திரன் வெளிநாடு சென்ற நேரத்தில் ஏற்பட்ட அந்நியச்செலாவணி மீறல் குறித்த விசாரணை ஒரு பக்கம் இருக்க மீண்டும் எம் ஜி. இராமச்சந்திரன் அந்நியச் செலாவணிச்சட்டத்தை மீறிவிட்டார் என்ற குற்றத்திற்கு ஆளாகக்கூடாது என்பதில் தமிழக மக்கள் கண்ணுங் கருத்துமாய் இருக்கிறார்கள். காரணம் இன்று அவர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறார் என்பதால் தமிழகத் தொழில் வளம் பெருக, இந்திய நாட்டின்பெருமையை நிலைநாட்டிட அரசியல் தலைவர்களோடு பேசுவதற்கு டவுனிங் தெருவிற்குச் செல்ல வேண்டியவர் ஹேரட்ஸ் கடை வீதிக்குப் போகலாமா என்பதுதான் தமிழ்நாட்டு மக்களின் கேள்வி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு-கருணாநிதி அவர்களால். அழகிரி அச்சகத்தில் (156சூரியநாராயணசெட்டிதெரு, இராயபுரம் 6.00013) அச்சிட்டுவெளியிடப்பட்டது நிர்வாக அலுவலகம், 'அன்பகம்'508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009